26

கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

326 / 2-5-57

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
17 APR 1957
MADRAS

ந. 12

செய்திகள்

இந்தியத் தேர்தல் முடிந்தது

இந்தியா சுதந்தரம் அடைந்த பிறகு இரண்டாவது பொதுத் தேர்தல் சமீபத்தில் முடிவுற்றது. ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பை வகிக்க மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ராஜ்ய சட்டசபைகள் மூலம் 2450 பிரதிநிதிகளும் லோக் சபை அல்லது பாராளுமன்றத்துக்கு 6 ஜம்மு - காஷ்மீர் பிரதிநிதிகளும் உட்பட 500 பிரதிநிதிகளும் இந்தத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். கிட்டத்தட்ட நாட்டின் ஜனத்தொகையில் பாதிப் பேர் - 19 கோடியே 30 லட்சம் மக்கள் இந்தத் தேர்தலில் வாக்களிக்க உரிமையுடையவர்கள். 21 வயது முடிந்தவர்கள் அனைவருக்கும் வாக்களிக்கும் உரிமை உண்டு. இமாலயப் பிரதேசம் தவிர மற்ற இடங்களில் எல்லாம் தேர்தல் முடிந்துவிட்டது. அங்கே மட்டும் பனிக்காலம் தீர்ந்ததும் மே அல்லது ஜூன் மாதத்தில் தேர்தல் நடக்கும். இந்தத் தேர்தலுக்கு 10 கோடி ரூபாய்க்குமேல் செலவு ஆகியிருக்கும் என்று மதிப்பிடப்படுகிறது.

இறக்கை இல்லாத விமானம்

இறக்கை இல்லாத நவீன விமானம் ஒன்றை அமெரிக்க ஆராய்ச்சிச் சாலையில் செய்து முடித்திருக்கிறார்கள். இந்த விமானத்தின் பெயர் 'ஏரோடைன்' என்பது. இந்த விமானம் சுலபமாக மேலே கிளம்புகிறது. அதேபோல் சுலபமாகத் தரையில் வந்து இறங்குகிறது. சாதாரண விமானங்களின் இறக்கையில் காற்று மோதுவதால் அவற்றின் வேகத்துக்குத் தடை உண்டாகிறது. ஆனால் இதற்கோ இறக்கைகள் இல்லாததால் தடை உண்டாவதில்லை.

புதிய நயா பைசா

1957 ஏப்ரல் 1-ஆம் தேதி முதல் புதிய நாணயங்கள் புழக்கத்துக்குக் கொண்டு வரப்படுகின்றன. பழைய ரூபாயின் மதிப்பு அப்படியேதான் இருக்கும். அதை 64 காலணாவாக முன்பு பிரிக்கப்பட்டிருந்தது. இப்போது 100 நயா பைசாக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அதாவது 100 நயா பைசாக்கள் கொண்டது ஒரு ரூபாய். இன்று முதல் ஒன்று, இரண்டு, ஐந்து, பத்து நயா பைசா நாணயங்கள்தான் புழக்கத்துக்கு வருகின்றன. மற்றவை அதாவது 25, 50 நயா பைசாக்களும் புதிய ரூபாயும் பின்னால்தான் புழக்கத்துக்குக் கொண்டு வரப்படும். ஆனால் ஒரு ரூபாய், அரை ரூபாய், கால் ரூபாய் நாணயங்களின் மதிப்பில் மாறுதல் எதுவும் கிடையாது.

புதிய இந்திய பஞ்சாங்கம்

1957 - ஆம் வருஷம் மார்ச் மாதம் 22 - ஆம் தேதி முதல் புதிய தேசியப் பஞ்சாங்கம் அமலுக்கு வருகிறது. ஒவ்வொரு தடவையும் புது வருஷம் வசந்த கால விஷு தினத்தின் மறுநாள் முதல் துவங்கும். புதிய முறைப்படி பன்னிரண்டு மாதங்களுக்குரிய நாட்களும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. பஞ்சாங்கச் சீர்திருத்தக் கமிட்டிப் பரிசீலனையில் 30 பஞ்சாங்கங்கள் தேசத்தில் அமலில் இருப்பதாகத் தெரிந்தது. அவைகளின் கணிப்பு முறையும், வருஷ ஆரம்பமும் வெவ்வேறு விதமாக இருந்தன. ஆகவே யூனியன் சர்க்கார் தேசம் முழுவதும் ஒரே விதமான தேசீய பஞ்சாங்கத்தை அமலுக்குக் கொண்டு வந்துள்ளது. இந்தியாவில் சக சகாப்தம்தான் வெகு காலமாகக் கையாளப்பட்டு வருகிறது. புதிய பஞ்சாங்கத் தயாரிப்பாளர்களும் அதையே ஆதாரமாகக் கொண்டும் மற்ற முறைகளுக்குப் பொருத்தமாகவும் மாற்றிக்கொள்கிறார்கள்.

326
7-57
THE REGISTRAR OF ...
17 APR 1957
MADRAS

கண்ணன்

பொருளடக்கம்

மலர்: 8 இதழ்: 7

1 - 4 - '57

குழந்தைகளே!	பக்கம்	2
தபால் பெட்டி	..	3
மூட்டை சார்!	..	5
கண்டுபிடியுங்கள்	..	6
அந்தச் சிலை	..	7
விளையாட்டுச் சுயம்வரம்		13
இன்ப ரோஜா	..	19
வெற்றிவீரன்	..	24
சைனு சு - சூ!	..	29
கவியரங்கம்	..	37
நீங்களும் நானும்	..	38

அட்டைப் படம்:
சந்தாமியான்

செய்திகள் - 2-அட்டை
நாணயமாற்று அட்டவணை
3-அட்டை

வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/4

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

சரியான வழி!

குழந்தைகளே!

இந்த இதழைப் பன்னிரண்டு நயா பைசா கொடுத்து வாங்கியிருப்பீர்கள் என்று நம்புகிறேன். கணக்குப்படி பார்த்தால் தபால் உறை என்ன விலையோ அந்த விலைதான் கண்ணனுக்கும் இருக்க வேண்டும். தபால் உறையின் விலை பதின்மூன்று நயா பைசா. இரண்டணு நாணயம் அதிகம் புழக்கத்தில் இருக்கும்வரையில் இப்படி இருக்கட்டும் என்று இப்போதைக்கு எண்ணியுள்ளோம்.

நாணயச் செலாவணியில் இது மிகப் பெரிய மாறுதல், நாணயக் கணக்குகளுக்குச் சுலபமானது. உலகில் பெரும்பாலான நாடுகளில் தசாம்ச முறைதான் அமலில் இருந்து வருகிறது. முன்னேறிவரும் இந்தியாவுக்கு இதெல்லாம் அவசியமான மாறுதல்தான். வளர்ச்சியே மாறுதல்தானே!

கண்ணன் பத்திரிகையிலும் இத்தகைய வளர்ச்சியை நீங்கள் காணலாம்.

முன்பு தெரிவித்தபடி அடுத்த இதழில் முதல் பரிசு பெற்ற மற்றொரு புதிய தொடர்கதை வெளியாகிறது. அத்துடன் சில விஞ்ஞானப் பகுதிகளை உங்களுக்கு உபயோகமுள்ள வகையில் படங்களோடு கூடிய கட்டுரையாக வெளியிட முயன்று வருகிறோம்.

அடுத்த சித்திரத் தொடர்கதை என்ன என்று கேட்டுப் பலர் எழுதியிருக்கிறார்கள். அதை வருஷப் பிறப்பு அன்று வெளிவரும் கண்ணனில் அறிவிக்கிறோம்.

சிலர் கட்டுரைப் போட்டி வைக்கவேண்டும் என்று யோசனை கூறியிருக்கிறார்கள். வேறு சிலர் கவிதைப் போட்டி வைக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். இவர்களுடைய ஆர்வத்தையெல்லாம் பாராட்டுகிறேன். தொடர்கதைப் போட்டியும் சித்திரப் போட்டியும் நடத்தி வரும்போது வேறு போட்டிகளையும் அதனுடன் கலந்து நடத்துவது சரியல்ல. எனவே போட்டி வைத்தால்தான் கலந்து கொள்வது; இல்லாவிட்டால் சும்மா இருப்பது என்று வைத்துக்கொள்ளாமல், அவரவர்களுக்கு எவற்றில் பயிற்சியும் பிடித்தமும் இருக்கின்றனவோ அவற்றைத் தாராளமாக எழுதி அனுப்பலாம். இதற்கு ஒரு போட்டி வைக்கட்டும் என்று காத்திருக்க வேண்டாம்.

கண்ணனில் புதிய எழுத்தாளர்கள் எழுதுவதற்கு எப்போதும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து வந்திருக்கிறோம். சொல்லப் போனால் எத்தனையோ அருமையான எழுத்தாளர்களை நாங்கள் கண்ணன் மூலம் கண்டு பிடித்திருக்கிறோம் என்றுகூடச் சொல்லலாம். ஆகவே யார் எதை எழுதினாலும் நாங்கள் ஒன்று விடாமல் படித்துத்தான் பரிசீலனை செய்கிறோம். நன்றாக உள்ள எந்த விஷயத்தையும் பிரசுரிக்கவும் தயங்குவதில்லை.

புதிய எழுத்தாளர்களை ஊக்கப்படுத்தும் முயற்சியில் மற்றொரு கஷ்டம்கூட நேர்ந்து விடுகிறது. நன்றாக இருக்கிறதே என்று சந்தோஷப்பட்டுப் பிரசுரமும் செய்துவிட்டால் அப்புறம்தான் தெரிகிறது அதன் உண்மை. அதாவது காப்பியடித்த கதையாக இருக்கிறது. இதனால் தான் கொஞ்சம் நாங்கள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டியிருக்கிறது. பல கதைகள் எழுதி அதெல்லாம் பிரசுரமாகாததைக் கண்ட சிலர் இப்படி எழுதியனுப்பிவிடுகிறார்கள் தம் பெயரில். இது தவறு. பிரசுரமாகாத போதுதான் ரோசத்தோடு முயன்று நன்றாக எழுத முயலவேண்டும். அதைவிட்டு இந்தமாதிரி வழிகளில் இறங்கினால் பெரும் தீமைதான் உண்டாகும். அப்படி எல்லாம் நீங்கள் நடந்து கொள்கிறவர்கள் அல்ல. நீங்கள் உங்கள் சொந்த முயற்சியால், உழைப்பால் வெற்றி பெற வேண்டும் என்பதே என் ஆசை. உங்கள் திறமையும் புகழும் ஓங்கி வளரட்டும்!

—ஆசிரியர்.



ஒரு யோசனை

கண்ணன் மலர்ந்த நாள் முதல் எண்ணற்ற இளம் எழுத்தாளர்களைத் தோற்றுவித்த வண்ணம் இருந்து வருகிறது. கண்ணனில் வண்ணக் கதைகள் எழுதி வரும் அவர்களைப் பற்றி அறிந்துகொள்ள அவர்களைப்பற்றிய சிறு குறிப்போடு, அவர்களின் புகைப்படங்களையும் கண்ணனில் பிரசுரித்தால் நலமாக இருக்கும். —மாருதன், இரவாஞ்சேரி.

(இந்த யோசனையை வரவேற்கிறேன். இதுபோல் ஒரு பகுதியைத் தொடங்க ஒரு யோசனை இருந்து வருவதால், விரைவில் ஆவன செய்ய முயலுகிறேன். ஆ-ர்.)

சில பாடல்கள்

எஸ். பார்த்நசாரதி (திருக்கோவிலூர்) எழுதிய விமர்சனப் பாடலையும் நாச்சியார்கோயில் ரா. கணேசன் அனுப்பியுள்ள 'தமிழ்' என்ற பாடலையும் பிரசுரிக்க இயலாவிடினும் நன்ருக இருந்தன என்று அறிவிக்க விரும்புகிறேன். (ஆ-ர்.)

மனத்தைக் கவர்ந்த கதை

1-3-57-இல் 'சாமு' எழுதிய கதை என் மனத்தைக் கவர்ந்தது.
—ஜி. எஸ். நாகேஸ்வரன், கோபி.

ஒலியும் பொருளும்

'டம் டம்' டமாரம்
'டும் டுமீல்' பீரங்கி
'கட் கட்' தந்தி
'பட் படார்' பட்டாசு
'தாம் திம்' மத்தளம்
'பாம் பூம்' மோட்டார்
'டிங் டாங்' மணி
'கர் புர்' ரேடியோ
'உர் கொர்' மந்தி
'குப் குப்' ரெயில்
'சுப் சிப்' பேசாதே! —வி. எஸ். ராகவன், கணியம்பூண்டி.

வருஷப் பிறப்பு ரிலீஸ்!

''பார்க்காதீர்! காணுதீர்!!

பட்டினி பிக்சர்ஸ் அளிக்கும்

தஞ்சாவூர் இட்டிலி

டைரெக்ஷன்: அரிசி; உதவி: உளுந்து.
கதை: சாம்பார்; வசனம்: சட்னி; சங்கீதம்: மிளகாய்ப்பொடி.
நடிகர்கள்: வெங்காயம்; பச்சைமிளகாய்; நல்லெண்ணெய்.
பூரண உரிமையாளர்கள்: பரதேசி தேனீர் விடுதி.''

—தேவராஜன், ஜயராமன், சீனிவாசன், ஜோலார்ப்பேட்டை.

வேடிக்கைக் கணக்குகள்

(1) நான் மார்க்கெட்டுக்குப் போனேன். ஒரு ரூபாய் கொண்டு போயிருந்தேன். பத்தணுவுக்குக் காய்கறி வகைகளை வாங்கினேன். கூடைக்காரன் (நயா பைசா அதற்குள் மார்க்கெட்டுக்கு வராததால்) மீதி ஆறணுவை இரண்டு நாணயங்களில் கொடுத்தான். அதில் ஒன்று நாலணு நாணயம் இல்லை. சாத்தியமா?

(2) ஒருவன் கோயிலுக்குப் போனுன். முன் வாயிலில் ஒருவன் இருந்தான். அவனிடம் ஒரு ரூபாய் கொடுத்துவிட்டு உள்ளே போனுன். போனதுமே கையில் மீதியிருந்தது இரு மடங்காகிவிட்டது. மறுபடியும் வெளியே வரும்போது ஒரு ரூபாய் கொடுத்தான்.

அப்புறம் இரண்டாவது கோயிலுக்குச் சென்றுன். வாசலில் நின்றவனிடம் ஒரு ரூபாய் கொடுத்துவிட்டு, உள்ளே போனதும் முன்போலவே மீதியிருந்த பணம் இருமடங்காகியது. வெளியில் வரும்போது மறுபடியும் ஒரு ரூபாய் கொடுத்துவிட்டு வந்தான்.

கடைசியாக மூன்றும் கோயிலிலும் இதேபோல நடந்தது. வெளியில் வந்த பிறகு கையில் எவ்வளவு இருக்கிறதென்று பார்த்தான். ஒன்றுமே இல்லை. அப்படியானுல் அவன் முதலில் எடுத்துச் சென்றது எவ்வளவு ரூபாய்?

—வேதா, வேப்பேரி, சென்னை-7

(3) ஒரு மாணவன் இரவில் தூக்கத்திலிருந்து கண் விழித்தான். அப்போது பக்கத்து வீட்டுக் கடிகாரத்தில் மணி ஒன்று அடித்தது. கொஞ்ச நேரத்துக்கெல்லாம் மீண்டும் ஒரு மணி அடித்தது. இன்னும் கொஞ்ச நேரத்துக்கெல்லாம் மீண்டும் ஒரு மணி அடித்தது. அந்தக் கடிகாரம் அரை மணிக்கு ஒன்றும் மற்றப்படி எண்ணிக்கை கணக்குப்படியும் மணி அடிக்கும். ஆதலால் அன்று அந்தக் கடிகாரம் கெட்டுப் போய் விட்டது என்று நினைத்தான். ஆனுல் அது சரியாகத்தான் இருந்தது என்றுல் அவன் கண் விழித்தபோது சரியான மணி என்ன?

—வீரா. விநாயகம், திருவத்திபுரம்.

(விடைகள்: 40-ஆவது பக்கம்)

* * *

எப்படியும் படிக்கலாம்

ஆ வ டி	ம த கு	ச ர கு	கு ரு வி	ப கு தி	உ த வி
வ ய ல்	த க டு	ர யி ல்	ரு ஷ் யா	கு டி ல்	த வி டு
டி ல் லி	கு டு வை	கு ல் லா	வி யா தி	தி ல் லை	வி டு தி

—ஏ. ரகுராமன், சென்னை-4.

* * *

என்று வருவாயோ?

அன்பார்ந்த கண்ணு!

உன் வரவை நோக்கி நோக்கிக் காத்திருந்தேன். குறிப்பிட்ட நாளும் வந்தது. ஆனுல் உன்னைக் காணேம். தோழியர் சேடியரைக் கேட்பதுபோல் கடையிலும் விசாரித்தேன். மறுநாளும் கடை வாயிலில் வந்து நின்று காத்திருந்தேன். அந்தச் சிலையைப் படித்து, சைஞ சு-ரூ வை ரசித்து மகிழலாம் என்றுல் இப்படியா என்னைச் சஞ்சலத்தில் ஆழ்த்துவது? சொன்னபடி குறித்த நாளில் என்று வருவாயோ?

—எஸ். ரமணி, மருத்துவக்குடி.

(அன்பு மிக்க தோழா! உன் சங்கடத்தைக் கண்டேன். சஞ்சலத்தைத் தீர்ப்பேன். சில வேளை எதிர்பாராமலே அப்படி ரெயில் தவறிவிடுகிறது. இனி அன்றே வருவேன். நன்று வருவேன். ஆ-ர்)

மூட்டை சார்!

எ.ந.கணபதி

வாங்கோ வாங்கோ மூட்டைசார்
வந்த காரியம் என்னசார்?
தூங்கப் போகும் நேரம்சார்
தூரப் போங்கோ மூட்டைசார்!
நட்ட நடுச் சாமம்சார்
நல்ல தூக்க நேரம்சார்
தட்டி எழுப்பிட வேண்டாம்சார்
தயவு வேண்டும் மூட்டைசார்!
ஓவல் தந்த ஊட்டம்சார்
ஊட்டிவளர்த்த தேகம்சார்!
கோவைப் பழம்போல் ரத்தம்சார்
குடித்தல் பாவம், பாவம்சார்!
பட்டப் பகல்போல் விளக்கெறியப்
படுக்கையைச் சுற்றிப் படைதிரள
கொட்டக் கொட்ட விழித்திருத்தல்
கொடுமை மிகவும் கொடுமைசார்!
பாங்காய்க் கட்டில் மூலையிலே
பதுங்கிய உம்மைத் தேடிடநான்
தூங்கா விரதம் இருப்பதுவும்
துன்பம் மிகவும் துன்பம்சார்!
போங்கோ போங்கோ மூட்டைசார்
புண்ணிய முண்டு மூட்டைசார்!
தாங்கா திந்த தேகம்சார்
சற்றே தூங்க விடுங்கோசார்!

கண்டு பிடியுங்கள்!

பி. ஜி. ராவ்



1. படம் (அ)வில் காட்டியபடி இரண்டு துண்டுகளையும், படம் (ஆ) படம் (இ) இவைகளில் காட்டியபடி நான்கு நான்கு துண்டுகளையும் வைத்துக்கொண்டு ஒரு சதுரம் அமைக்கவேண்டும்.

2. முதல் படத்தில் உள்ளபடி ஒரு குளத்தைச் சுற்றி நான்கு ஏழை மனிதர்கள் குடிசைகளைக் கட்டியிருந்தனர். பிறகு இன்னும் நான்கு பிரபுக்கள் அந்த ஏழைகளின் குடிசைகளுக்குப் பின்புறத்தில் இரண்டாம் படத்தில் காட்டியபடி வீடுகளை அமைத்துக்கொண்டார்கள். ஏழைகள் குளத்திலுள்ள நீரை எடுக்கக்கூடாது என்று தீர்மானித்து, அந்தப் பிரபுக்கள் அவர்களுடைய குடிசைகளைச் சுற்றி ஒரே ஒரு சுவரை அமைத்தார்கள். அப்படிச் செய்ததில் பிரபுக்கள் மட்டும் தண்ணீர் எடுக்க முடிந்தது என்றால் அவர்கள் அந்தச் சுவரை எவ்வாறு அமைத்தார்கள்?



படம் 1

3. ஒன்பது பொத்தான்களையோ அல்லது சிறு கற்களையோ ஒரு வரிசைக்கு மூன்று வீதம் பத்து வரிசைகளை அமைக்கவேண்டும்.

(விடைகள்: 39-ஆவது பக்கம்)



படம் 2

சேகர் சந்தேகக் குறிப்புடன் சுரேஷைப் பார்த்தான். அவனே பிறகு கதவை உட்புறம் தாளிட்டுவிட்டு வந்து பேச ஆரம்பித்தான்.

"நீ ஏதோ ஒரு ரகசியமான விஷயத்தில் ஈடுபட்டிருக்கிறாய். அன்று போட்டியில் நீ சுழலில் சிக்கித் தப்பித்து வந்த இடம் இந்தப் படத்தில் நன்கு தெரிகிறது. உனக்கு ஏதோ புது அநுபவம் ஏற்பட்டிருக்கிறது; நீ மட்டும் அதைத் தனியாக விடுவிக்க முயல்கிறாய். அன்று முதல் இன்றுவரை உன்னுடன் பழகின உயிர் நண்பனிடம்கூட உனக்கு நம்பிக்கையில்லை. இந்த ஜிம்மிக்கு உன் விஷயங்கள் எல்லாம் தெரியும். ஆனால் எனக்கு..உன்னுடன் மிகவும் நெருக்கமாகப் பழகிய எனக்கு..? உனக்காக என் உயிரையே அளிக்கத் தயாராயுள்ள என்மீதும் உனக்கு நம்பிக்கையில்லை" என்று வருத்தத்துடன் கூறினான் சேகர்.

அவன் சொல்லச் சொல்ல, சுரேஷுக்கும் வருத்தமாகத்தான் இருந்தது. ஒன்றுமில்லை. மிகச் சாதாரண விஷயங்களைக்கூட ரகசியமாக வைத்துக்கொள்ளும் திறன் வாய்ந்தவன் சேகர். அவனையும் நம்பலாம் என்ற தைரியம் ஏற்பட்டது சுரேஷுக்கு. தன் நண்பன் அபாயகரமானவனல்ல. சந்தேகப்படக் கூடியவனல்ல என்பது அவனுக்குப் புரிந்துவிட்டது.

தன் ஆசனத்தை விட்டு எழுந்தான் அவன். முன்னெச்சரிக்கையாக அறைக் கதவை ஒரு தடவை திறந்து வெளியே பார்த்தான். பிறகு மறுபடியும் அதைத் தாளிட்டு விட்டு, எல்லா ஜன்னல்களின் கண்ணாடிக் கதவுகளையும் மூடினான். இப்போது அவனுக்குத் தெம்பு வந்துவிட்டது!

வாய் மொழியாகக் கூறுவதற்கே தயங்கினான் அவன். பிறகு சமாளித்துக்கொண்டு நீச்சல் போட்டி நடந்தது முதல் அன்றுவரை அவனது அநுபவங்களையெல்லாம் கதைபோல் விவரிக்க ஆரம்பித்தான் அவன். சொல்லச் சொல்ல சேகருக்குப் பிரமிப்பாக இருந்தது. கடைசியில் அவன். "நீ என்னைப் பற்றி சந்தேகப் பட்டதிலும் நியாயம் இருக்கவே செய்கிறது. ஆனால் அதையும் நீ செய்தாய் என்பதைத்தான் என்னால் பொறுக்க முடியவில்லை" என்றான்.

தான் முழு முயற்சியுடன் சுரேஷுடன் ஒத்துழைப்பதாக உறுதி கூறினான் அவன்.

சுரேஷ் பரிபூரண திருப்தியடைந்தான்.

சுரேஷின் முயற்சியில் மற்றுமோர் அத்தியாயம், ஏடு திரும்பியது. அதைத் தெரிந்துகொண்ட ஜிம்மி சேகருடன் வலது முன் காலைக் கொடுத்துக் 'கை'குலுக்கியது.

போலீஸாரிடம் சந்தேகமோ, அன்றி என்ன காரணமானாலும் சரி, தற்போது தகவல் தெரிவிக்க வேண்டாம் என்ற சுரேஷின் தீர்மானத்தைச் சேகர் ஆமோதித்தான்.

இருவருக்கும் சந்தேகம்.

பறங்கியன் தோப்பு ஆட்களுக்கு உதவியாட்கள் ஜீயபுரத்திலும் பரவலாக இருக்கலாம். இருக்க முடியும்-இருந்தே ஆகவேண்டும் என்பதே அது. அப்படியானல் அவர்களிடமிருந்து தங்களைப் பாது காத்துக்கொள்ள வழிவகைகளைத் தேட வேண்டும். அந்தப் பொறுப்பு சேகரிடம் ஒப்புவிக்கப் பட்டது!

சுரேஷின் வாசகசாலையினின்று தற்போதுத் தமிழ்ப் புத்தகங் களோ இலக்கியங்களோ வெளியே எட்டிப் பார்ப்பதும் குறைந்து விட்டது. துப்பறியும் நாவல்கள் ஏராளமாக வரவழைத்தான் அவன். அவ்வளவையும் படிக்கத் தொடங்கினன். தனக்கு எவ்வளவு தூரம் சந்தேகங்களைத் தோற்று விக்க முடியுமோ அவ்வளவையும் உற்பத்திசெய்து, அவைகளை ஒழுங்குபடுத்தினன் அவன். பிறகு ஒவ்வொன்றையும் விடுவிக்க முயன் முன்.

''ஜிம்மியை இவ்விஷயத்தில் எவ் வளவு தூரம் உபயோகிக்க முடி யும்?''

அப்போதுதான் ஓர் உண்மை அவனுக்குப் புலப்பட்டது. சாதா ரண விஷயம்தான், அதிலும் பொருள் இருக்கவே செய்தது!

'ஜிம்மியுடன் முன்போல் அதிக மாக விளையாடுவதில்லை. அத னுடன் வெளியே உலாவச் செல்வ தில்லை' என்பதுதான் அது.

ஆனல் அதனல் விபரீதங்கள் ஏற்பட்டால் - ?

* * *

ஜிம்மியின் தடவடிக்கைகளிலும் இப்போது மாறுதல் ஏற்படத் தொடங்கியது. தன் நண்பனின் அன்பை எதிர்பார்த்த அது அவ் விதத்தில் ஏமாற்றம்தான் அடைந் தது. வேளா வேளைக்கு ஆகாரம்

கிடைத்து விட்டால் போதுமா? தினசரி மாலை வெளியே கிளம்பிச் சென்றது அது. இரவு எட்டு மணிக்குத்தான் திரும்பியது.

சுரேஷும் அதைப்பற்றிக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அவனது வேலைப் பளு கவலைக்கு நேரம் அளிக்கத் தவறிவிட்டது. அது எங்கே சென்றிருந்தாலும் திரும்பி வந்துவிடும் என்பதில் அவனுக்குச் சந்தேகம் இல்லைதான். இதுபோல்தான் அன்றும் நடந்தது. மாலை மூன்று மணிக்கே வீட்டை விட்டுப் புறப்பட்டு விட்டது ஜிம்மி. சுரேஷ் அதைக் கவனிக்கவில்லை.

நேரமாக ஆக ஜிம்மி வெளியே சென்றிருப்பது அவன் கவனத்திற்கு வந்தது. கவலையும் அதிகமாகத் தொடங்கியது. 'செயலுக்குப் பிரதி கவலை'யல்லவா? எட்டு மணிக்காவது தினம் திரும்பிவிடும். இன்று..மணி பத்து.. பதினொன்றும் ஆகிவிட்டது. ஜிம்மிக்காகக் காத்திருந்து, கண் விழித்துக் கொண்டிருந்தான் சுரேஷ். தூக்கம் கண்ணைச் சுழற்றியதே தவிர, ஜிம்மி வந்தபாடில்லை. வருத்தத்துடன் படுக்கைக்குச் சென்றான் சுரேஷ். ஆகாரத்திற்கு அது என்ன செய்யும் என்பது அவன் முதற் கவலை. திரும்புமோ திரும்பாதோ என்ற சந்தேகம் இரண்டாவது.



சற்று நேரம்தான் தூங்கினான். திடீரென்று விழிப்பு ஏற்பட்ட போது மணியைப் பார்த்தான்.

மணி ஒன்று!

விருட்டென்று எழுந்தான் படுக்கையிலிருந்து. இப்போதாவது ஜிம்மி வந்திருக்கிறதா என்று பார்த்தான்.

வாசலில் காம்பவுண்ட் கேட்டைத் திறந்தான். ஜிம்மி வந்திருந்தது! நிலவொளியில், தெருவில் காம்பவுண்டின் ஓரமாக அது படுத்திருந்தது நன்கு தெரிந்தது. அதைப் பார்த்ததும் பரிதாபமாகப் போய்விட்டது சுரேஷுக்கு. நிலவொளியில் உறங்கிக்கொண்டிருந்த ஜிம்மியின் காலியான வயிறு அடிவரை சென்று மேலே வருவது அவனை என்னவோ செய்தது. 'டார்ச்'சை அதன் முகத்தில் அடித்தான்.

''ஜிம்மி!''

துள்ளி எழுந்தது ஜிம்மி. ஆனால் மறு கணம்..

நிற்க முடியாமல் அது கீழே விழுந்துவிட்டது. சுரேஷுக்கு ஒன்றும் புரியவில்லை. அதன் கால்களில் வெளிச்சத்தைச் செலுத்திப் பார்த்தான். ஆம்; ரத்தம் ஏராளமாக வெளியேறிக் காய்ந்த சுவடு அங்கே நன்கு தெரிந்தது. காலில் நல்ல அடி அதற்கு.

சுரேஷ் ஜிம்மியை ஜாக்கிரதையாகக் கைகளில் தாங்கிக்கொண்டு உள்ளே எடுத்துச் சென்றான். சந்தடி செய்யாது ஸ்நான அறைக்குக் கொண்டுசென்றான் அதை. வெந்நீரால் அதன் கால்களை நன்றாகக் கழுவிச் சுத்தம் செய்து செய்து, மருந்து போட்டுக் கட்டினான். அதற்கு ஆகாரம் கொடுத்த பின் அங்கேயே விட்டுவிட்டுப் படுக்கைக்குச் சென்றுவிட்டான் அவன்.

அவன் மனத்தில் புதிய பாரம் ஒன்று அழுத்தியது. பேச முடியாத ஏக்கம் அது. தனது உயிரைக் காத்த நண்பனைத் தானும் அலட்சியப்படுத்திவிட்டோமே என்ற ஏக்கம் அது. தனது மன நிலையைச் சுரேஷினாலேயே முழுவதும் புரிந்து கொள்ள முடியவில்லையே!

பின்னால் ஏதோ பயங்கரம் ஒன்று நடக்க விருப்பதற்கு அறிகுறிதானா இந்த மனக் கலக்கம்?

* * *

7. கத்தி-மர்ம உருவம்

ஜிம்மியைக் குறித்து சேகருடன் ஆராய்ந்தான் சுரேஷ். அது அடிபட்டது சுபாவமாகவா? சிறுவர்களின் செயல்தானா? வேண்டாதவரின் மர்மமா? அல்லது.. அல்லது..?

மேலே என்னதான் சொல்வது!

எதிரிகளின் பார்வையில் ஜிம்மியோ அல்லது தாங்களோ விழுந்துவிட்டோம் என்பதைத் தைரியமாக நினைக்க முடியவில்லை அவனால். இரவிலேயே ஒன்றை நன்கு கவனித்திருந்தான் அவன். ஜிம்மியின் காலிலிருந்து கொட்டிய ரத்தத்தைவிடச் செக்கச் சிவப்பாக அநேகமாக அதன் உடல் முழுவதும் படிந்திருந்த செம்மண் புழுதி தான் அது!

அவனைப் பொறுத்தமட்டிலும் இது ஒரு முக்கியமான விஷயம் தான். செம்மண்பாங்கான பூமியே ஜீயபுரம் வட்டாரத்தில் கிடையாதே. ஆனால்..?

ஒன்று நன்கு விளங்கியது சுரேஷுக்கு. ஜிம்மியும் ஒரு விஷயத்தில் ஈடுபட்டிருக்கிறது என்பதே அது. செம்மண் புழுதி, ஜிம்மி நெடுந்தூரம் சென்று வந்திருக்கிறது என்பதை நன்கு எடுத்துக் காட்டியது. ஒரு தீர்மானம் செய்து கொண்டான் அவன். மற்றொரு முறை-அதாவது ஜிம்மியின் கால் காயம் நன்கு குணமானபின்-ஜிம்மியைப் பின்தொடர்ந்து செல்வது என்பதுதான் அது!

மற்றொன்று. ஆனால் முந்தியதைவிட முக்கியமான துப்புத்தான். ஜிம்மி தன் ரத்தத்தில் ஒரு பகுதியை இழக்க நேர்ந்தாலும் அதிலும் பயனே இருந்தது. 'ஓரளவு' காயம்பட்ட இடத்தை நன்கு கழுவிவிட்டுப் பார்த்ததில் காயத்தின் பரிமாணம், ஆழம், தன்மை யாவும் நன்கு தெரிந்தன. சுரேஷ் அவைகளைக் குறித்துக் கொண்டான். காயம் பட்ட இடத்தையும் சரியாக அளந்து

கொண்டான். வலது முன்னங் காலின் வலது பக்கத்தில் (வெளிப் புறம்) இடப்பாகத்தில் நடுக் காலில்தான் காயம்பட்டிருந்தது! ஒரு படி மேலேயும் சென்றான் சுரேஷ்! பாகைமானி, ஸ்கேல் போன்றவற்றால் அந்த இடத்தைச் சரியாக அளந்து குறிப்பெடுத்துக் கொண்டான். ஜிம்மி அசையாமல், ஆடாமல் கற்சிலைபோல் நின்று கொண்டிருந்தது. செம்மண் புழுதி யின் பரிமாணத்தையுமல்லவா குறிப்பெடுத்துக் கொண்டான் அவன்!

காயம் எதிரிகளால் ஏற்படுத்தப் பட்டதாயிருந்தால் இந்தக் குறிப்பு கள் உபயோகப்பட்டாலும் படலா மல்லவா?

சேகர், சுரேஷின் குறிப்புகளைக் கொண்டு, பல கோணங்களில் ஆராயத் தொடங்கினான்.

ஜிம்மியை ஓர் இடத்தில் நிறுத் தினர் இருவரும். சற்றுத் தூரத்தில் தள்ளி நின்றுகொண்டு தன்னைச் சரி செய்துகொண்டான் அவன். அவனது கையில் காகிதப் பந்து ஒன்று. பல 'சாய்வு'களில் நின்று கொண்டு ஜிம்மியின் காலில் குறி வைத்து எறிந்து பார்த்தான் அவன். ஒரு புறத்தில் நின்று கொண்டு குறித்த முறையில் குறித்த வேகத்தில் அந்தப் பந்தை எறிந்தபோது, சரியாக ஜிம்மியின் காயம் பட்ட இடத்திலேயே அந்தப் பந்து பட்டது.

'ஆகா' என்று துள்ளிக் குதித் தனர் இருவரும்.

* * *

மற்றுமோர் அத்தியாயம் அவனது வாழ்வில் ஏடு திருப்பியது. சேகர் புதுப் புது சந்தேகங்களையும் பயங்களையும் சுரேஷின் மனத்தில் தெளித்தான். அதற்கு மாற்றையும் அவனே அளித்து உற்சாகப்படுத்த வும் செய்தான்.

ஒரு நாள்..அந்த ஒரு நாள் சம்பவம்..

வழக்கம்போல் காலையில் எழுந்து பார்க்கும்போது தரையில் கிடந்த ஒரு காகித உறை அவனை எதிர் கொண்டழைத்தது.

பரபரப்புடன் அதை - ஆனாலும் அந்த உறையைக் கையினால் தொடாமலேயே - எடுத்துப் பிரித் தான் சுரேஷ்.

''கடாட்சம் விழுந்துவிட்டது. கவலை வேண்டாம்!'' என்ற வார்த்தைகள் ஆங்கிலத்தில் 'டைப்' செய்யப்பட்டிருந்தன!

உரலில் தலையைக் கொடுத்தபின் உலக்கையிடிக்குப் பயந்தால் முடியுமா? அதற்குத் தகுந்த மருந்தோ அல்லது முன்னெச்ச ரிக்கையோ இருந்தால் கவலை ஏன்? சுரேஷுக்கு இருந்த ஊக்கம் அவ னுக்கு ஏற்பட்ட அச்சத்தை விரட்டி அடித்தது!

வழக்கம்போல் எட்டு மணிக் கெல்லாம் சேகர் வந்துவிட்டான். விஷயத்தைக் கேட்டதும் திடுக் கிட்டுவிட்டான் அவன். ஒரு கண நேரம்தான். ''கவலைப்படாதே, சுரேஷ். இதெல்லாம் வெத்து வேட்டுத்தான். ஆனாலும் நீ பெய ரளவில் முன்னெச்சரிக்கை என்றில் லாமல் செய்கையிலும் அதைக் காட்ட வேண்டும்'' என்று ஆறுதல் கூறினான் அவன்.

உண்மையிலேயே, உண்மை யான நட்பிருக்குமிடத்தில் வேறென்னதான் தேவை?

சேகர் மற்றுமொரு பிரச்னை யைக் கிளப்பினான். ''இப்போது மர்மக் கடிதத்தைப் பார்த்தால், அவர்களுக்கு உன்னைப் பற்றித் தகவல் கிடைத்துவிட்டதென்று தெரிகிறது. உன் உயிரைப் பாது காப்பதற்கான வழிகளை இன்று முதல் நீ செய்ய வேண்டும். வீட்டி லிருந்து நீ வெளியே வருவதையே நான் விரும்பவில்லை. மற்றது, ஜிம்மியை 'வீட்டைக் காக்கும்' என்று நம்பி விட்டுவிடாதே. முதலுக்கே மோசம் வரலாம். வெளித் தகவல்களைச் சேர்க்க நான் உனக்கு உதவி செய்கிறேன்'' என்றான்.

ஜிம்மியின் மோப்ப சக்தியை நேரிடையாக எப்படி உபயோகப் படுத்துவது என்பதைக் குறித்து நன்கு விவாதித்தனர் இருவரும்.

தனது மாமா தனக்குப் பரி சளித்த விலையுயர்ந்த காமிராவைக் கொண்டு வந்தான் சேகர். நெடு

நாள் உபயோகப்படுத்தாத அதைச் சுத்தம் செய்து பிலிமுடன் 'லோட்' செய்தான் அதை. அதற்கும் உடனே உபயோகம் வரும் என்று அவர்கள் அறியாரா?

அன்று முதல் சேகரும் சுரேஷின் வீட்டிலேயே படுத்துக் கொள்வதாகத் தீர்மானம் செய்தான். மர்மக் கடிதத்தில் துப்பு ஒன்றும் கண்டுபிடிக்க முடியாது என்பதை அவர்கள் அறிந்தனர். அதைக் கை படாமல் சுரேஷ் பூமியிலிருந்து எடுத்தாலும், தங்கள் விரல் பதிவை அதில் விட்டுப் போகும் அளவுக்கு எதிரிகள் முட்டாள்கள்தாஞ?

கூடிய விரைவில் மிகவும் பயங்கரமான சம்பவம் ஒன்று நிகழப் போவதை அவர்கள் அறியவில்லை!

8. துப்பாக்கிக் குண்டு

மறுநாள் காலையில் முதலில் விழித்துக் கொண்டான் சுரேஷ்!

பெண்: அப்பா, அப்பா! பள்ளிக்கூட குரூப் போட்டோவிலே நான் நல்லா விழுந்திட்டேம்பா!

அப்பா: போ, போ, மக்கு! ஸ்டைலா நிமிர்ந்து நிக்கிறதை விட்டுட்டு, ஏன் விழுந்து தொலேச்சே?

—ஆர். நடராஜன், உடன்குடி.

சேகரையும் எழுப்பிய அவன், 'காபி' அருந்திவிட்டுப் படுக்கை யறைப் பக்கம் சென்ருன். சாவியை எடுத்துப் பூட்டைத் திறந்தான் சேகர். அறைக்கதவைத் திறந்ததுதான் தாமதம். 'ஆ' வென்று அலறிவிட்டனர் இருவரும்.

அங்கே....?

அங்கே..ஜன்னல் ஓரமாகப் போடப்பட்டிருந்த கட்டிலின்மீது படுத்திருந்த உருவத்தின் கழுத்தில்....?

ஆழமாகப் பாய்ந்திருந்தது, சுருள் கத்தி!

எந்த ஒரு சுருள் கத்தியை சுரேஷ் பறங்கியன் தோப்பில் கண்டாஞே அதே சுருள் கத்தி, உருவத்தின் கழுத்தில்....?

சுரேஷ் தன்னை மறந்த நிலையில் நின்றுவிட்டான். சேகர் அவனை அங்கேயே இருக்கச் சொல்லிவிட்டு, 'போட்டோ காமிரா'வை எடுத்துவரச் சொன்ஞன். காமிரா வந்ததும், அறைக் கதவருகே நின்றபடி அந்த நிகழ்ச்சியைப் பல கோணங்களில் படம் எடுத்துக் கொண்டனர் அவர்கள்.

என்ன இது? அவர்களின் செய்கை விசித்திரமாக வல்லவா இருக்கிறது? இரு ரோல் பிலிம்களைச் செலவழித்துவிட்டனர்!

பிறகு காமிராவைப் பத்திரப் படுத்திவிட்டு, சேகர் முதல் அடி வைத்து நடந்தான். ஜன்னல், தாழ்ப்பாள் போட்டது போட்ட படியேதான் இருந்ததே தவிர, திறந்த சுவடு இல்லையே! கதவோ வெளிப்பக்கம் பூட்டியிருந்ததை இன்று காலைதானே இருவரும் திறந்தனர்!

ஆஞல், கத்தி?

அங்கிருந்து எப்போது வந்திருக்க முடியும்? கத்தியை மிகவும் கஷ்டப்பட்டுப் பிடுங்கிஞன் சேகர். ஆம்! எவ்வளவு ஆழம் பாய்ந்திருந்தது அது!

பிறகு போர்வையை விலக்கிஞன் அவன்....

அங்கே? (தொடரும்)

விளையாட்டுச் சுயம்வரம்

தே. பார்த்தசாரதி

"பாட்டி, ஒரு கதை சொல்லு, பாட்டி" என்று கேட்டுக் கொண்டே நானும் என் தங்கை சுதாவும் தம்பி ரவியும் முற்றத்தில் உட்கார்ந்தோம். முற்றத்தில் நன்றாக நிலா வெளிச்சம் விழுந்திருந்தது.

பாட்டி சொன்ன கதையை அரை மனத்துடன் ஒரு காதால் வாங்கியபடி உட்கார்ந்திருந்தேன். ஆனால், என் மனமோ அந்தக் கதையில் சொல்லாமல் வேறு ஒரு கதையையே சிருஷ்டித்துவிட்டது.

* * *

1

சமீபகாலத்திலே குயிலாப்பூரில் திவான் பகதூர் சுந்தரம் பெரிய தனவந்தராக விளங்கிவந்தார். அவருக்கு லீலா என்று ஒரு பெண். அவள் திருமண வயதை அடைந்ததும், பெற்றோருக்குக் கவலை பிடித்துக் கொண்டுவிட்டது. அவளுக்குத் தக்க ஒரு கணவனைத் தேடுவது எப்படி என்று அவர்கள் மூளையைக் குழப்பிக்கொண்டிருந்த போது, திவான் பகதூர் சுந்தரத்தின் மூளையில் (?) பளிச்சென்று ஒரு யோசனை உதித்தது. அந்த யோசனையை உடனே காரியத்தில் நிறைவேற்றத் தீர்மானித்தார்.

அதற்குப் பிறகு இரண்டு நாட்கள் கழித்து, மூன்றாம் நாள் காலை திவான் பகதூர் சுந்தரம் கையில் ஒரு பேப்பரை எடுத்துக் கொண்டு தம் மனைவியிடம் வந்தார். பேப்பரில் ஒரு குறிப்பிட்ட இடத்தைக் காட்டிப் படிக்கச் சொன்னார். அந்த அம்மாள் படித்தாள்:

மணமகன் தேவை!

நல்ல செல்வ நிலையில் இருக்கும் ஒரு வீட்டுப் பெண்ணுக்கு 20 முதல் 25 வயதுவரை உள்ள ஒரு பட்டதாரி கணவன் தேவை. பெண்ணின் பெயர் லீலா. வயது: கல்யாண வயது. நன்றாக நடனம் ஆடுவாள்; அருமையாக வீணை வாசிப்பாள். காது கொடுத்துக் கேட்கும்படி பாட்டுப் பாடுவாள். சுவைத்துச் சாப்பிடும்படிச் சமைப்பாள். ஹிந்தி ராஷ்டிரபாஷை வரை படித்திருக்கிறாள். எஸ். எஸ். எல். ஸி. பாஸ் செய்திருக்கிறாள். இவளை மணக்க விரும்பும் பட்டதாரிகள் இன்னும் ஒரு வார காலத்திற்குள் தங்கள் புகைப்படத்துடன், தங்கள் உத்தியோகம், வருமானம், சொத்து, வயது முதலிய சகலவிதமான விவரங்களையும் எழுதி, விண்ணப்பத்தாள்களைக் கீழே கொடுத்துள்ள விலாசத்திற்கு அனுப்பவும். மற்ற விவரங்கள் அவரவர்களுக்குப் பின்னர் எழுதி அனுப்புவோம்.

நிபந்தனைகள்:

1. முடிவுத் தேதிக்குப்பின் வரும் மனுக்கள் கண்டிப்பாக நிராகரிக்கப் படும்.

2. மனுவில் அடித்தல் திருத்தல் ஒன்றும் இருக்ககூடாது.

3. மனுவின் நான்கு ஓரங் களிலும் மஞ்சள் தடவி இருக்க வேண்டும்.

4. இது சம்பந்தமாக மணப் பெண்ணின் தீர்ப்பே முடிவானது. தைரியமுள்ள ஆண்கள் அனைவரும் எழுதலாம்:-

திவான் பகதூர் சுந்தரம்.
நடுத்தெரு, குயிலாப்பூர்.

இந்த விளம்பரத்தைப் படித்த தும் திவான்பகதூர் சுந்தரத்தின் மனைவி தன் மோவாய்க்கட்டை

யைத் தோள் பட்டையில் பலமாக இடித்துக் கொண்டாள். பிறகு, ''இது என்ன கூத்தாக இருக்கிறது? நம் பெண்ணின் கல்யாணத்திற்கா இப்படி ஏற்பாடு செய்திருக்கிறீர் கள்?'' என்றாள்.

திவான் பகதூர் சுந்தரம், ''ஆமாம். மனுக்கள் எல்லாம் வந்ததும், அவற்றில் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து, அந்த மனு தாரர்களுக்கு ஒரு குறிப்பிட்ட தேதியில் இங்கே வரும்படி எழுது வேன். அந்தத் தேதியில் அவர்கள் அனைவரும் வந்ததும், ஒரு சுயம் வரம் நடக்கும். லீலா இஷ்டப் பட்டவனுக்கு மாலையிடுவாள்'' என்று விளக்கினார்.

''என்ன, சுயம்வரமா? உங்களுக் குப் பைத்தியம்தான் பிடித்திருக் கிறது! இந்தக் காலத்தில் யாராவது சுயம்வரம் நடத்துவார்களா?''

''நான் நடத்தப் போகிறேன். உடனே மற்றப் பெரிய மனிதர்கள் எல்லோரும் இதுதான் 'பாஷ'னுக் கும் என்று நினைத்து, தங்கள் பெண்களின் கல்யாணத்துக்கும் ஒரு சுயம்வரம் நடத்துவார்கள், பார்'' என்றார் திவான் பகதூர்.

2

மனுக்கள் எதிர் பார்த்த தற்கு மேலாக வந்து குவிய ஆரம்பித்து விட் டன. திவான்பகதூர் சுந்த ரம்அந்த மனுக்களுடன் வந் திருந்த போட்டோக்களைப் பார்த்து, தமக்குப் பிடித்

திருந்த பலருக்கு ஒரு குறிப்பிட்ட தேதியில் வரும்படிக் கடிதம் எழுதினார்.

அந்த நாள் வந்தது. பட்டதாரி இளைஞர்கள் பிரமாதமாக 'டிரஸ்' செய்து கொண்டு 'சுயம்வர மண்டப'த்தில் குறிப்பிட்ட நேரத்தில் கூடினார்கள். மணப்பெண் எப்போது வருவாள் என்று ஆவலுடன் அவர்கள் எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர்.

கடைசியில் லீலா அழகாக அலங்காரம் செய்துகொண்டு, கையில் ஒரு நல்ல ரோஜாமாலையையும் எடுத்துக் கொண்டு மண்டபத்துக்குள் நுழைந்தாள். ஒவ்வொரு இளைஞனையும் அவளுக்கு அறிமுகம் செய்து வைக்க வேண்டிய பொறுப்பு பட்டுவின் தலையில் விழுந்தது. பட்டு, வேறு யாருமில்லை; லீலாவின் தம்பிதான். பள்ளியில் ஐந்தாம் பாரம் படித்துக்கொண்டிருந்தான். குறும்புக்காரன். கையில் குறிப்பு ஒன்றை வைத்துக்கொண்டு அதிலிருப்பதைப் பார்த்து ஒவ்வொரு இளைஞனையும் பற்றி வர்ணித்தான் அவன்.

முதலில் உட்கார்ந்திருந்த இளைஞன் பான்ட்டும், முழுக்கைச் சட்டையும் தரித்திருந்தான். மூக்குக்கண்ணாடி ஒன்று அவனுடைய நீண்ட மூக்கின்மேல் அமர்ந்திருந்தது. தான் முதலில் உட்கார்ந்திருந்தபடியால் தனக்குத்தான் லீலா மாலையிடுவாள் என்று அவன் எதிர்பார்த்தான். பட்டு அவனை அறிமுகம் செய்து வைத்தான்:

''இதோ இவர்தான் குரோம்பேட்டை இளவரசர். அங்குள்ள செருப்பு தயாரிக்கும் தொழிற்சாலைக்குப் பக்கத்தில் ஒரு பங்களாவில் இருக்கிறார். டாக்டர் வேலை பார்க்கிறார். பெயர் நரசிம்மன். இவரிடம் மருந்து வாங்க ஒரு முறை வந்தவர்கள், பிறகு வருவதே இல்லை. அவ்வளவு கைராசி உடையவர். 'இவர் கையால் தண்ணீர் குடித்தாலும் போதும், மோட்சம் கிட்டிவிடும்' என்று

அநேகர் பேசிக் கொள்கிருர்கள். அக்கா, விருப்பமிருந்தால் நீ இவரையே திருமணம் செய்து கொள்ளலாம்.''

பட்டு இப்படி அறிமுகம் செய்ததும் லீலா யோசித்தாள். ஒரு டாக்டரின் மனைவியாகப் போவது அவளுக்குப் பிடிக்கவில்லை. நேரம் பொழுதில்லாமல் நோயாளிகள் வந்து தொந்தரவு செய்வார்கள். ஆகவே, ''மேலே நகரு'' என்று தம்பிக்குச் சைகை மூலம் உத்தர விட்டாள். டாக்டருக்குத் தலை தொங்கிவிட்டது. உடம்பு சரியில்லை என்று சொல்லிவிட்டு எழுந்து போய்விட்டார்.

அடுத்தாற்போல் இருந்த இளைஞன் தலையில் தலைப்பாகையுடனும், கறுப்புக் கோட்டு அணிந்து கொண்டும் காட்சி தந்தான். பட்டு அறிமுகம் செய்து வைத்தான்: ''அக்கா, இவர் திருவல்லிக்கேணியைச் சேர்ந்தவர். வக்கீல் வேலை பார்க்கிருர். கட்சிக்காரர்களிடம் மிகவும் அன்பாகப் பேசுவார். பணம் சேர்ப்பதில் கைகாரர். இவரைக் கருமி கனக ராஜன் என்ற பெயரில் குறிப்பிடுவார்கள். இப்போது உன் கை மாலையைப் பெற இரண்டணு பஸ் சார்ஜ் கொடுத்து இங்கே வந்திருக்கிருர். இதிலிருந்தே அவருக்கு உன்பேரில் உள்ள பிரியம் தெரியவில்லையா?''

லீலாவுக்கு வக்கீல் கழுத்தில் மாலையிடப் பிடிக்கவில்லை. பொழுது போகவில்லை யென்ருல் தன்னிடம் வந்து குறுக்கு விசாரணை செய்ய ஆரம்பித்துவிடுவார். பீஸ் நிறைய வாங்கிவிட்டதற்காகக் கட்சிக்காரன் தன்மீது கோபப்பட்டுத் தன்னை உதைப்பது போல் கனவுகண்டு இரவில் அலறுவார். கேஸ் ஒன்றும் வராவிட்டால் வீட்டையே கோர்ட்டாகப் பாவித்து ஹாலில் குறுக்கும் நெடுக்குமாக உலாவியபடி, ''மை லார்ட் அண்டு ஜென்டில் மன் ஆப் தி ஜூரி. இந்தக் கேஸைக் கவனியுங்கள். என் மனைவி பிறந்தகம் போக வேண்டும் என்கிருள்..'' என்று கேஸை விளக்க ஆரம்பித்துவிடுவார். 'வேண்டாம், வக்கீல் வேண்டாம்' என்று எண்ணி, அவருக்கு மாலையிடாமல் லீலா மேலே சென்ருள்.

தன் கழுத்தில் கட்டாயம் மாலை விழும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்த வக்கீல் ஏமாற்றத்துடன் எழுந்தார். ''எனக்கு ஓர் அவசர கேஸ் இருக்கிறது'' என்று லீலாவின் தகப்பனரிடம் சொல்லிவிட்டுக் கால் நடையாகவே வீட்டை நோக்கி நடந்தார்!

அடுத்த ஆசாமியைப் பட்டு இப்படி அறிமுகம் செய்வித்தான்: ''அக்கா, இவரது நடையுடை பாவனைகளைக் கண்டவுடனேயே இவர் ஒரு தமிழ்ப்பண்டிதர் என்று தெரியவில்லையா? சிறந்த தமிழறிஞர். கம்ப ராமாயணத்தைக் கரைத்துக் குடித்தவர். நாலடியார் மனப்பாடம். புறநானூறு தலைகீழ்ப்பாடம். தமிழ், தமிழ் என்றே எப்போதும் இவர் சிந்தனை ஓடிக் கொண்டிருக்கும். சுருங்கச் சொன்னுல் தமிழுக்காகவே உயிரை வைத்துக்கொண் டிருக்கிருர்.''

தமிழ்ப் பண்டிதரை மணப்பது பெரும் ஆபத்து என்று நினைத்தாள் லீலா. எப்போதாவது ஒரு முறை கடிதம் எழுதினுல்கூட 'கொஞ்சு மொழி அஞ்சுகமே! கண்ணைக் கவரும் கிளியே!' என்று விளித்துப் புரியாத தமிழில் தீட்டிவிடுவார். அவரோடு பேசும் போதும் செந்தமிழில்தான் பேசவேண்டியிருக்கும். இவ்வாறு எண்ணிய லீலா அவருக்கு மாலையைப் போடாமல் மேலே நகர்ந்தாள்.

தமிழ்ப் பண்டிதருக்குத் தலை தொங்கி விட்டது. 'ஐயகோ! இச்சிறு பெண் நம் பெருமையை அறியாது, தன் பேதைமதைத் தனத்தால் எனக்குச் சிறுமை இழைத்துவிட்டனளே! தமயந்தியைப் போன்ற அன்ன நடையும், சந்திர மதியைப் போன்ற முகமும் மட்டும் இருந்து யாது பயன்!' என்று தமக்குள் நொந்தவராய் அவர், ''ஐயனே, அடியேனுக்கு இப்போழ்தில் அவசரப் பணியொன்று காத்துக் கிடக்கிலது. ஆகவே, அடியேன் நும்மிடம் விடை பெறுகின்றனம்'' என்று எழுந்து சென்றுவிட்டார்.

அடுத்தவர் கையில் ஒரு தோல்பை காட்சி தந்தது. பட்டு சொன்னான்; ''அக்கா, நீ பயப்படாதே! இவர் ஓர் இன்ஷ்யூரன்ஸ் ஏஜண்ட். எமகாதகன். இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியில் வேலையாயிருக்கிறார். யாரைப் பார்த்தாலும் 'எம் கம்பெனியில் இன்ஷ்யூர் செய்து கொள்ளுங்கள்' என்று உயிரை எடுத்து விடுவார். இவரையும் இவர் தோல்பையையும் வெகு தூரத்தில் கண்டதுமே அநேகர் ஓட்டம் எடுத்து விடுவார்கள். பெயர் மார்க்கண்டேயன்.''

லீலா கொஞ்சமும் யோசிக்கவில்லை. மேலே சென்றாள். மார்க்கண்டேயர் தொங்கிய தலையுடன், ''இன்றைக்கு ராவ்சாகிப் ரங்கசாமி என்னை வந்து பார்க்கச் சொல்லியிருந்தார்.'' நான் வருகிறேன். என்று அவசர அவசரமாகச் சொல்லிவிட்டு நடையைக் கட்டினார்.

அடுத்தாற் போல் கதர் வேட்டியும் ஜிப்பாவும் அணிந்துகொண்டு ஓர் ஆசாமி உட்கார்ந்திருந்தார், அவரிடமிருந்து வந்த 'செண்ட்' வாசனை கும்மென்று மூங்கைத் தூக்கியடித்தது. பட்டு தன் அக்காவுக்கு அவரைச் சுட்டிக் காட்டிச் சொன்னான். ''இவர் ஓர் எழுத்தாளர். பெயர் (அதாவது உண்மைப் பெயர்) கமலக்கண்ணன். இவருடைய கண் ஒரு மாதிரி இருக்கிறதே என்று பார்க்க வேண்டாம். சிறந்த (?) எழுத்தாளர். 'ஆப்பை' 'கரண்டி' 'தோசை' 'அடுப்பு' 'நெருப்பு' 'கடங்காரன்' 'இட்லி' 'சட்னி' முதலான பல புனைபெயர்களில் கதைகள் எழுதுகிறார். உனக்கு இஷ்டப்பட்டால் இவரையே நீ மணந்துகொள்ளலாம்.''

ஓர் எழுத்தாளரை மணந்து கொண்டு யாரால் நிம்மதியாக இருக்க முடியும்? எப்போது பார்த்தாலும் பேப்பரில் ஏதாவது கிறுக்கிக்கொண்டே இருப்பார். அதோடு விடுவாரா? 'இந்தக் கதையை நீயும் படித்தால்தான் ஆச்சு!' என்று அடம் பிடிப்பார். அதோடாவது விடுவாரா? ஊஹூம்! 'கதை எப்படி இருக்கிறது?' என்று அபிப்பிராயம் வேறு கேட்பார். 'நன்றாயில்லை' என்று சொன்னால் கோபம் வந்துவிடும். ('நன்றாயிருக்கிறது' என்று சொன்னால் அது பொய்யாகும்.) அந்தக் கோபத்தில் கதையைத் துண்டு துண்டாகக்கிழித்துப்போட்டுவிட்டு வேறொரு கதையை எழுத ஆரம்பிப்பார். குப்பையைப் பெருக்கிக் கொண்டிருக்கத்தான் தனக்கு நேரம் சரியாக இருக்கும் என்று எண்ணி, தம்பியை மேலே போக உத்தரவிட்டாள் லீலா. எழுத்தாளர் 'ஆப்பை' தன் கதைகளில் வரும் வில்லனைப் போல் ஒரு முழி முழித்து விட்டு எழுந்து போய் விட்டார்.

இப்படியே பட்டு ஒவ்வொருவராக அறிமுகம் செய்வித்தான். கலைஞர், நடிகர் என்று அங்கே உட்கார்ந்திருந்த அனைவரையும் பற்றி விளக்கமாக வர்ணனை செய்தான். ஆனால், ஒருவராவது லீலாவுக்குத் திருப்தியைத் தரவில்லை. ஒருவர் கழுத்திலும் மாலையைப் போட இஷ்டமில்லாமல் அவள் பாட்டுக்குப் போய்க்கொண்டே இருந்தாள்.

கடைசியில் அனைவரும் பொறுமை இழக்கும் சமயம். லீலாவின் கண்கள் அந்த மண்டபத்திலேயே ஓர் மூலையில் சாதுவாக உட்கார்ந்து கொண்டு வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த ஓர் அழகிய இளைஞன்மீது விழுந்தன. அவன் கையில் ஒரு நோட்டு இருந்தது. அவனைக் கண்டதுமே லீலாவுக்குப் பிடித்து விட்டது. பட்டுவுக்கு அந்த ஆசாமி யாரென்று தெரியவில்லை. பட்டு சிந்தனையில் ஆழ்ந்துகொண் டிருந்த போதே, யாரும் எதிர்பாராத விதமாக லீலா அந்த இளைஞனின் கழுத்தில் மாலையைப் போட்டு விட்டு நாணிக் கோணி நின்றாள். சுயம்வர மண்டபத்திலிருந்தவர்கள் ''ஆ!'' என்ற வியப்பொலி எழுப்பினார்கள். ஆனால் அந்த ஆசாமியோ, ''ஐயோ! என் கழுத்திலா மாலையைப் போட்டாய்!'' என்று கத்திக் கொண்டே மூர்ச்சையுற்றுக் கீழே விழுந்தான்!

3

லீலாவின் பெற்ருேர்கள் ஓடி வந்தார்கள். அந்த இளைஞனின் உதட்டில் காப்பியைத் தெளித்து அவனை மயக்கத்திலிருந்து எழுப்பினர்கள். உடனே அவன் எழுந்து உட்கார்ந்து கொண்டு, ''ஐயோ, என்னை விட்டுவிடுங்கள்! நான் எழுந்து ஓடிவிடுகிறேன்'' என்ருன்.

திவான் பகதூர் எரிச்சலுடன், ''இது என்ன ஐயா, விளையாட்டாக இருக்கிறது? சுயம்வரத்துக்கு வந்துவிட்டு மாலையைப் போட்டதும் 'முடியாது' என்று எப்படிச் சொல்லலாம்?'' என்று கேட்டார்.

''நான் சுயம்வரத்துக்கு வந்தது வாஸ்தவம்தான். ஆனல் மாப்பிள்ளையாக வேண்டும் என்ற எண்ணத்துடன் வரவில்லை''

''பின் எதற்காக வந்தீர்கள்?''

''மக்களின் முற்போக்குப் பத்திரிகையான 'தினசரிப் புளுக'னின் குயிலாப்பூர் நிருபர் நான். பத்திரிகையில் இன்று சுயம்வரம் நடப்பதாக வந்திருந்த விளம்பரத்தைப் பார்த்துவிட்டு, இதைப்பற்றி என் பத்திரிகையில் எழுதலாம் என்று நினைத்துக் கொண்டு வந்தேன். நான் இந்த ஜன்மத்தில் கல்யாணமே செய்து கொள்ளப் போவதில்லை என்று பிரதிக்ஞை செய்து கொண்டிருக்கிறேன். தயவு செய்து என்னை விட்டு விடுங்கள்'' என்று விளக்கினன் அந்த ஆசாமி.

திவான்பகதூர் கண்டிப்புடன், ''அதெல்லாம் நடக்காது. எப்பொழுது என் பெண் இஷ்டப்பட்டு உம் கழுத்தில் மாலையைப் போட்டாளோ, அப்பொழுதிலிருந்து உம் கழுத்து அவளுக்குச் சொந்தமாகிவிட்டது. நீர் அவளை மனைவியாக ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும்'' என்ருர்.

அந்த இளைஞன் மறுபடியும் மூர்ச்சையடைந்தான்.

* * *

''அப்புறம் என்ன பாட்டி ஆச்சு?''

என் தங்கை சுதா பாட்டியின் கதையைக் கேட்டுவிட்டு வினவினுள். அவள் குரல் என் சிந்தனையைக் கலைத்தது.

''அப்புறம் என்ன? அந்த ராஜகுமாரனும் ராஜகுமாரியும் கல்யாணம் செய்து கொண்டு என்றென்றும் சுகமாக வாழ்ந்தார்கள். கதையும் காட்டுக்குப் போச்சு, நீங்களும் தூங்கப்போங்கள்'' என்று பாட்டி கதையை முடித்தாள்.

என் தம்பி ரவி என்னிடம் வந்து, ''பாபு, பாட்டி இன்னிக்குச் சொன்ன ராஜா ராணிக் கதை நன்ருயிருந்தது. இல்லே?'' என்ருன்.

''ஆமாம். ரொம்ப நன்ருயிருந்தது'' என்றேன். ஆனல் நான் பாட்டி சொன்ன கதையைக் கேட்கவே இல்லை என்பது அவனுக்கு எப்படித் தெரியும்! ..

''இந்தப் பஸ் க்யூவைப் பார்த்தா ரெயில் ஞாபகம் வர்றது?''
''அதோ, எதிர்த்தாப்பலே இருக்கும் பாலத்தைப் பார்த்தா சமீப விபத்து ஞாபகம் வர்றது எனக்கு!''

இன்ப ரோஜா

'வேதா'

அன்று ஞாயிற்றுக் கிழமை: பொழுதே போகவில்லே. அந்த வாரத்தில் பத்திரிகைகளே யெல்லாம் படித்து முடித்து - ஏன் 'ரிவைஸ்' கூட பண்ணியாகி விட்டது - 'போர்' அடித்ததில் வியப்பில்லே. (அடடா! சொல்ல மறந்து விட்டேனே! நான் ஓர் 'இண்டர்' மாணவன்.) என்ன செய்வதென்று யோசித்துக் கொண்டிருந்த போதுதான், அப்பா கூப்பிட்டார் என்னே.

''என்னடா கிண்டி எக்ஸிபிஷனுக்கு வரயா!''

கரும்பு தின்னக் கூலியா வேண்டும்?

''ஓ! தாராளமாக!'' என்றேன்.

''சரி! ரெடியா யிரு!'' என்று கூறி விட்டுப் போனுர் அப்பா.

அங்கேதான் 'எக்ஸிபிஷன்' பதினெரு மணிக்குத் தொடங்கி விடுமாமே; எனவே பத்து மணிக்கெல்லாம் கிளம்பி விட்டோம். நான், என் அப்பா இருவருந்தான். 'எழும்பூருக்குச் சென்று, அங்கிருந்து இருபத்து மூன்ரும் நம்பர் பஸ்ஸிலோ அல்லது மின்சார வண்டியிலோ போவதென்று முடிவு செய்தோம். முதலில், பஸ்ஸுக்காகத்தான் காத்திருந்தோம். அரை மணியாயிற்று; பஸ் வருவதாகக் காணும்! எரிச்சல் வந்தது எனக்கு. ''அப்பவே ரெயிலிலே போயிருக்கலாமே!'' என் உதடுகள் முணு முணுத்தன.

அப்பா உறுத்துப் பார்த்தார் என்னே.

''இதுக்குத்தான் உன்னேயெல்லாம் கூட்டிண்டு போகவே கூடாதென்பது! கொஞ்சங்கூட பொறுமையில்லேயே'' என்று குரலில் கோபம் தொனிக்கக் கூறினுர்.

நான் அடங்கி விட்டேன். ஆனுலும் என் உள்ளம்..? அது அடங்கவே யில்லே. மின்சார வண்டியில் நான் உட்கார்ந்திருந்த போது, என் மனம் என்னென்னவோ கற்பனைகளே எழுப்பியது.

''அடுத்த வருஷம் நாமும் 'இஞ்சனியரிங் காலேஜி'லே சேர முடியுமா?..' அதுக்குத்தான் நிறைய 'மார்க்' வேணுமே! வாங்க முடியுமா....? முடியாவிட்டால் இருக்கவே இருக்கு. பி. ஏயோ, பி. எஸ்ஸியோ: அதைப் படிச்சுட்டு என்ன பண்ணறது?.. உம்..பார்க்கலாம்..! இன்னும் 'பரீட்சை' வரத்துக்கே ஒன்றரை மாசம் இருக்கே!''

அப்பா என் முதுகில் தட்டிய பிறகுதான் உணர்வேற்பட்டது. துள்ளி எழுந்தேன். அங்கிருந்து மற்ருெரு 'பஸ்ஸி'ல் சென்று 'கிண்டி'க்குச் சென்ருேம்.

சில நாவல்களின் தலேப்பே கவர்ச்சியாயிருப்பது போல, எனக்கு அந்த 'எக்ஸிபிஷ'னின் வெளித்தோற்றமே மகிழ்ச்சி யூட்டும் வகையில் கவர்ச்சிகரமாகக் காட்சி யளித்தது. ஒவ்வொரு பகுதியாகப் பார்த்துக் கொண்டே மின்சாரப் பகுதிக்கு வந்தோம்.

'அலிபாபா குகை'க்குள் நுழைந்தவுடன் எனக்குச் சினிமா நினேவு வந்தது. ஏன்? உள்ளே நுழைந்த இடமே சினிமாக் கொட்டகை போலத்தானே இருந்தது!

''அடடா! நாமும் அடுத்த வருஷம் இங்கே படிக்க மாட்டோமா!'' என்று நினேத்தேன். ஆனுல் இந்த எண்ணம் செயலில் உருப்பெறுவதோ, அல்லது நீர் மேலெழுத்தாக அழிந்து போவதோ எல்லாம் படிப்பை யல்லவா பொறுத்திருக்கிறது?

படிப்பில் நான் சுமார்தான்; இருந்தாலும், அதிர்ஷ்டமடிக்காதா? என் ஆசை, நிராசைகளே நான் நினேத்து முடிப்பதற்குள், 'இஞ்சினியரிங் பகுதி முடிந்து விட்டது. அடுத்த பகுதிக்குச்

சென்றோம். அங்கேதானே எனக்கு வேண்டியதெல்லாம் இருக்கின்றன!

என்னவென்று கூறினால் ஆச்சரியப்பட்டாலும் படலாம்; எனக்கு வேண்டிய, 'புக்'ஸ்டால்களெல்லாம் அந்தப் பகுதியில்தானே இருக்கின்றன!

அப்பப்பா! எத்தனைப் புத்தகங்கள்! நான் வாயைப் பிளந்தேன். அப்பாவிடமும் கூறினேன்: ''அப்பா! அந்தப் புஸ்தகம்...''

''வேறு வேலையில்லை? நாம் இங்கே பார்க்க வந்தோமா? வாங்க வந்தோமா?'' என்று சிடுசிடுத்தார் அப்பா.

என் முகம் சுருங்கியது.

'நான் பெரியவனானால் நாவல்களாக வாங்கிக் குவித்துவிட மாட்டேனா!' என்று எண்ணிக் கொண்டே, என் அப்பாவைப் பின் தொடர்ந்தேன்.

அடுத்த பகுதியில்தான் 'டெலிவிஷன்' இருக்கிறது. அங்கே அன்று 'சிவாஜி' வசனம் பேசுவதைப் பார்க்கலாம் என்று துண்டுப் பிரசுரத்தில் அறிவித்திருந்தது. என் மனம் மகிழ்ச்சியில் திளைத்தது. 'சிவாஜி' என்றால் வேறு யாருமில்லை! சினிமா நடிகர் சிவாஜி கணேசன்தான்:

அடடா! என்ன வசனம்! எப்படிப் பேசுகிறார்! நான் அவர் வசனம் பேசுமிடத்துக்கே சென்றுவிட்டேன்! நான் அதிர்ஷ்டசாலி: இல்லாவிட்டால் 'டெலிவிஷனை'க் கண்டதுடன் சிவாஜி கணேசனின் 'சிம்ம கர்ஜனை'யையும் கண்டிருக்க முடியுமா, ஒரே கல்லில் இரு மாங்காய்கள் விழுந்தது போல?

நான் ஆனந்தத்தில் மிதந்தேன்.

எல்லாவற்றையும் முடித்துத் திரும்பிக்கொண் டிருந்த போது, ''என்ன பத்மநாபன்!'' என்ற குரல் கேட்டது. திகைத்துத் திரும்பினேன்.

என்னுடைய 'ஃபிசிக்ஸ்' (பௌதிகம்) ஆசிரியர் வரதன்!

''அப்பா! இவர்தாம்ப்பா என் 'ஃபிசிக்ஸ் லெக்சரர்!'' என்று வரதனை என் அப்பாவுக்கு அறிமுகப்படுத்தினேன்.

''ஓஹோ! சந்தோஷம்!'' என்று கூறியவாறே, கை கூப்பினார் அப்பா. பிறகு நாங்கள் மூவருமாகச் சென்று புல்தரையில் உட்கார்ந்தோம்.

''ஆமாம்..பையன் எப்படிப் படிக்கிறான்?'' என்று என்னைப் பற்றி விசாரித்தார் ஆசிரியரிடம்.

''தேவலை; நடு நடுவே கொஞ்சம் விஷமம் உண்டு. இருந்தால் என்ன; 'ஸ்டூடண்ட்' தானே!''

''என்னவோ! இவன் எப்படியாவது படிச்சு முன்னுக்கு வந்தால் சரி''. இது அப்பா. நான் அப்பொழுதுதான் கவனித்தேன். என் உபாத்தியாயரின் கையில் ஒரு புத்தகம்!

''என்ன ஸார், அது?'' என்று வினவினேன்.

''இதுவா! ஒரு நாவல்! வி. பி. கே. எழுதின 'தழும்பு'. எனக்கு இதிலெல்லாம் கொஞ்சம் 'இண்டரஸ்ட்' உண்டு.''

தேவலையே! கல்லூரியில் மிகவும் கண்டிப்பானவர் என்று பெயர் வாங்கிய என் ஆசிரியர் வரதன் இவ்வளவு சகஜமாகப் பேசுகிறாரே! நாவல் கூடப் படிப்பாராமே! அதுவும் எப்படிப்பட்ட நாவல் என நினைக்கிறீர்கள்! என் அபிமான எழுத்தாளருடையது. நான் 'புக்ஸ்டா'லில் அப்பாவைக் கேட்டேனே, அதே நாவல்தான்.

என் இருதயம் ஆனந்தம் தாங்காமல் 'படபட'வென்று அடித்துக் கொண்டது. நான் எதை நினைந்து மகிழ்ச்சியடைவது?

என்னுடைய கல்லூரி ஆசிரியர் இப்படி என்னுடன் பேசுகிறாரே என்பதற்காகவா? அல்லது என்னுடைய ஆசிரியரின் நாவலை, இந்தக் கல்லூரி ஆசிரியரும் படிக்கிறாரே என்பதற்காகவா?

எதுவுமே இப்படித்தான்; நாம் விரும்பும் பொருள், மற்றவர்களும் விரும்புகிறார்கள் என்றால் நம் மனம் எப்படித் துள்ளுகிறது.

''ஸார்! அந்தப் புத்தகத்தைக் கொடுக்கிறீர்களா? பார்த்துட்டுத் தர்றேன்!'' என்றேன் நான், மகிழ்ச்சிக் கடலில் நீந்தியபடியே.

கையில் வாங்கிப் பார்த்தேன்: பார்த்துப் பார்த்துத் தீரவில்லை: திரும்பிக் கொடுப்பதற்குச் சிறிது சங்கடமாகக்கூட இருந்தது!

"சரி; நான் அப்போ வர்றேன்!" என்று புறப்புட்டு விட்டார் அவர்-வரதன். எனக்கு வருத்தமாகத் தான் இருந்தது.

அனுமார் வால்போல் நீண்ட 'க்யூ'. நாங்களும் அந்த 'வாலில்' ஒரு சிறிய பகுதியாக நின்று கொண்டிருந்தோம். 'சைதாப் பேட்டைக்குப் போக வேண்டிய பஸ் வந்தது. உள்ளே உட்கார்ந் தோம்.

"என்னடா பத்து!" என்று சுவாதீனமாக முதுகில் தட்டிய படியே ஒரு குரல் வந்தது. யாரென்று கவனித்தேன். அடே.. என் 'ஓல்ட் பிரண்ட்' மணி யல்லவா!

"என்னடா! யார்னு தெரிய றதா!"

"தெரியாமல் என்ன! சார், 'டயம்' என்ன ஆச்சு?" அவன் 'மணி' யாதலால், அவனிடம் எல்லோரும் இவ்வாறு கேட்டுப் பார்த்துப் பரிகசிப்பது வழக்கம்.

"இன்னும் பழசு எல்லாம் ஞாபகம் இருக்காப்பலே இருக்கே!" என்றான் மணி தனக்கே உரித்தான குரலுடன்.

"ஆமாம்..இப்ப நீ எந்தக் காலேஜிலே சேர்ந்திருக்கே? எப்படி இருக்கு 'இண்ட'ரெல்லாம்! மேலே எஞ்சனியரிங்கா. மெடிகலா!" ஒரே மூச்சில் எல்லாக் கேள்வி களும் வந்தன.

"நான்தான் 'லயோலா'வில் படிக்கிறேன். நீ என்ன 'ஜெயினு'? என்ன இருந்தாலும் 'ஸ்கூல் லைப்' போல ஜாலியா இருக்க முடியல் லியே! ஒரு நாள் வராமல்போனு, அபராதம் ஐந்து ரூபாய் என் கிறான்: என்ன காலேஜ் போ!" என்று அலுத்துக் கொண்டான்.

"என் காலேஜில் அவ்வளவு 'ஸ்டிரிக்ட்' இல்லே! இருந்தாலும் அந்தப் பள்ளிக்கூடமும், அங்கே நம்முடைய இதுவும்.." என்று என்னென்னவோ சம்பந்தமில்லா மல், நான் பேசினதற்குக் காரணம்,



நான் அப்படியே பழைய கால நினைவுகளில் முழுகிப் போனது தான்.

''என்னடா பேசாமல் போயிட்டே! ஆமாம்..நம்ம 'ராஜி' எங்கே படிக்கிறுன்?''

''யாரு! எந்த ராஜி? இரண்டு ராஜி இருக்கிறுர்களே!''

''ரெண்டு பேரையுந்தான்!''

நான் எனக்குத் தெரிந்த வரைக்கும் எல்லாவற்றையும் விவரித்தேன். அவனும் 'கிராமபோன்' போல் பழைய காலப் பள்ளிப் படிப்பைப் பற்றிப் 'பாடி'க் கொண்டேயிருந்தான்.

பேசப் பேச அலுக்கவே யில்லையே! இன்னும் பேசிக்கொண்டே இருக்க வேண்டும் என்றல்லவா தோன்றியது! ஆனல்..இந்தப் பாழும் பஸ் சீக்கிரமே சைதாப் பேட்டைக்கு வந்து தொலைந்து விட்டது! எனக்கு எரிச்சல் ஏற்பட்டது.

நாம் நெருங்கிப் பழகியவரை நெடு நாள் கழித்துச் சந்தித்தால், நேரம் நிமிடமாக அல்லவா ஓடி விடுகிறது!

வீடு போய்ச் சேருகிற வரைக்கும் என் மனம் அன்று நடந்த நிகழ்ச்சிகளிலேயே பதிந்து போயிருந்தது: என்ன எத்தனை இன்பமாயிருந்தது!

'வாழ்க்கை துன்பம் நிறைந்தது' என்றெல்லாம் நாவலாசிரியர்கள் வருணிக்கிறுர்களே, அவர்கள் எவ்வளவு முட்டாள்கள்!

காலை ஏழு மணி. நான் மெதுவாகப் படுக்கையில் புரண்டேன். என்னைத் தட்டி எழுப்பினுள் என் அம்மா. வெறுப்புடனே படுக்கையை விட்டு எழுந்தேன்.

சேச்சே! என்ன கஷ்டம்! அன்று முதல் 'பழைய குருடி கதவைத் திறடி' என்பதைப் போல மறுபடியும் 'காலேஜ்! பிசிக்ஸ், கெமிஸ்ட்ரி, மாதமாடிக்ஸ்! மறுபடியும் அதே போர்! என்ன தலைவலி!'

காலேஜில் காலடி வைத்த பிற்குதான் சடாரென நினைவு வந்தது.'' ஐயோ! 'ரிகார்ட் நோட்' எழுதவில்லையே! மறந்தே போய் விட்டேனே! கல்லூரிக்குக் கொண்டு வரக்கூட இல்லை! கொண்டு வந்தாலாவது ஏதாவது கிறுக்கி விடலாம்! என்ன செய்வது இப்போது!''

'சரி! வந்தது வரட்டும்' என்று (அசட்டு?) தைரியத்துடன்தான் வகுப்பினுள் நுழைந்தேன். நுழைந்தவுடனே..

'ரிகார்ட் நோட்' கொண்டு வராதவர்கள் வெளியே போகலாம்!'' என்று ஆங்கிலத்தில் அறிவித்தார், என் ஆசிரியர் வரதன்.

எனக்கென்னவோ கொஞ்சம் தைரியம்! 'நேற்றுப் பார்த்துப் பேசினேமே; கொஞ்சம் விட்டுக் கொடுக்க மாட்டாரா!' என்றெண்ணந்தான்.

''ஸார் மறந்து போயிட்டேன்!''

''எழுதவா? கொண்டு வரவா?'' என்று வினவினர் அவர்.

''இரண்டுந்தான் ஸார்..'' என்றேன் தயங்கியபடியே.

''எதுவானுல் என்ன? 'யு பிளீஸ் கெட் அவுட்!' 'ரிகார்ட்' கொண்டு வராமல் எப்படி கிளாசுக்கு வரலாம்?'' ஆங்கிலத்தைத் தமிழில் கலந்தபடியே அனல் சொற்களை அள்ளி வீசினுர் என் 'அருமை' ஆசிரியர் வரதன்.

எனக்கு அவர் முகத்தைப் பார்க்கக்கூடப் பயமாக இருந்தது, நேற்று எப்படி அன்பாகப் பேசினுர்? இன்று ஏன் இப்படி? ஆசிரியர்கள் இப்படித்தான். வெளியில் ஒரு முகம். கல்லூரியினுள் நுழைந்து விட்டால், மற்ருெரு வேற்று முகம்-கடுமையான முகம்தான்!

எனக்கு வெறுத்தே விட்டது. என்ன காலேஜோ, என்ன ரிகார்டோ? சைக்கிளில் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தேன். என் ஆத்திரத்தையெல்லாம் அதன்மேல் காட்டினேன். அதன் பலன்...

எழும்பூர் ஹைரோடுக்கு வரும் போது தெரிந்தது! வேகமாக வந்த நான் ஒரு சைக்களுடன் மோதி விட்டேன்.

''என்ன ஸார், நாலு கண்கள் இருந்துமா கண் தெரியல்லே?'' நான் மூக்குக் கண்ணடி அணிந்திருப்பதைச் சுட்டிக் காட்டி ஏளனம் செய்தார் மற்றவர்.

நான் பேசாமல் இருந்தேன்; என்ன பதில்தான் கூற முடியும்? அப்போதிருந்த நிலையில், என்னால் தள்ளிக் கொண்டுதான் வீட்டை அடைய முடிந்தது.

வீட்டை அடைந்ததுமே அம்மா வரவேற்றாள். ''ஏண்டாப்பா இவ்வளவு சீக்கிரம்!''

''என்னவோ! உனக்கென்ன? பேசாமல் போயேன்!'' - என் மனம் இருந்த இருப்பில் அப்படித்தான் பதிலளிக்க முடிந்தது.

அம்மா பேசாமல் போய் விட்டாள்.

நான் ஒரு மூலையில் பேசாமல் உட்கார்ந்திருந்தேன். என் மனக்கடலில் எழுந்த அலைகள் எத்தனை எத்தனையோ! எவ்வளவு நேரம் அப்படியே உட்கார்ந்திருந்தேனோ எனக்கே தெரியாது. அப்பாவின் அர்ச்சனைதான் என்னை இந்த உலகிற்கு வரவழைத்தது.

''ஏண்டா பத்து, நன்றாயிருக்கே நீ படிக்கிற லட்சணம்! உன்னைத் துரத்தி விட்டாராமே வரதன், நிஜந்தானா?''

நான் விழித்தேன். அதற்குள் எப்படி அப்பாவிற்குத் தெரிந்தது?

''நிஜந்தாப்பா'' என்றேன் நான். அழுகை வரலாமா என்று யோசித்தது.

''நீ பாட்டுக்குக் கத்திரிக்காயும் கதையும் படிச்சிருந்தா உன்னைத் துரத்தாமெ இருப்பாரா? எனக்குக் கொஞ்சங்கூட பிடிக்கல்லே நீ எப்போதும் கதை படிக்கறதும், ஊர் சுற்றுவதும்.'' அப்பா கோபமாகப் பேசி விட்டுச் சென்று விட்டார். என்ன உலகம் இது! நேற்றெல்லாம் இன்ப முகமாகக் காட்சியளித்த உலகம் இன்று ஏன் துன்பமயமாகத் தோற்றமளிக்கிறது? ஏன்? ஏன்? ஒன்றுமே புலப்படவில்லை; ''எல்லாமே மாயந்தான் போலும்!'' ஒரே ஒரு நாள் அநுபவம் என்னை வேதாந்தியாக மாற்றிவிட்டது!

வெறுத்துப் போன மன நிலையில் ஏதோ ஒரு பழைய புத்தகத்தைப் புரட்டினேன். அங்கே கடைசியிலிருந்த வரி என்னைக் கவர்ந்தது.

''வாழ்க்கை ஒரு ரோஜாச் செடி. அந்தச் செடியிலிருந்து ஒரு ரோஜாவை எடுத்து, அதிலுள்ள இதழ்களையெல்லாம் பிய்த்துக் கொண்டே போனால், கடைசியில் முள்தானே கையில் குத்தும்! அது போல...''

அடுத்தப் பக்கத்தை அவசர அவசமாகப் பார்த்தேன். காணப்படவில்லை. கிழிந்து விட்டது போலும்!

அதனாலென்ன?

என் உள்ளத்தில்தான் ஒட்டிக் கொண்டு விட்டதே!

வெற்றி வீரன்

'திருச்சி அண்ணா'

விஜயபுரிக்கு, அரசன் விஜய பாலன். அவனது காலத்திலே நாட்டில் தருமம் செழித்தது. வயல்கள் கொழுத்தன. மக்கள் ஆனந்த வாழ்க்கை நடத்தி வந்தனர். நாடெங்கும் கல்விச்சாலைகள் பரவி வந்தன. கலைக் கோயில்கள் எழுந்தன. விஜயபாலனது சபையை அறிவாளிகளும் புலவர்களும் கலைவாணர்களும் அலங்கரித்தனர்.

ஒரு சமயம் விஜயபாலன் கொலுவிருக்கும்பொழுது, ஒரு புலவர் வந்து, அரசனது பிரபாவங்களைப் பாடினார்.

''ஆகா! அபாரம்! அற்புதம்!'' என்றார் மந்திரி.

''மகா காவியம்!'' என்றனர் பண்டிதர்கள்.

''புலவரே, உமது கவித் திறமைக்கு எதுவுமே ஈடாகாது. ஆகையால், உமக்குப் பரிசு அளிக்க விரும்புகிறேன். நீவிர் வேண்டும் பொருள் யாது?'' என்று வினவினான் விஜயபாலன்.

''அரசே, தங்களது மணி மகுடமே என் மனதைக் கவர்ந்து விட்டது!'' என்றார் புலவர். விஜயபாலன் மறுமொழி கூற வில்லை. புன்னகையுடன் ஆசனத்தை விட்டு எழுந்து, மணி மகுடத்தைக் கழற்றி, புலவரிடம் கொடுத்தான்.

ராஜா விஜயபாலனது மணி மகுடத்தை அணிந்தவராய், புலவர் விஜயபுரியை விட்டுக் கிளம்பினார். பல பல ஊர்களைச் சுற்றிக்கொண்டு விக்கிரமபுரிக்குச் சென்றார்.

நேராக அரண்மனைக்குள் நுழைந்தார். விக்கிரமபுரி ராஜா விக்கிராந்தன் முன்னிலையிலே புலவர் நின்றுகொண்டிருக்கிறார். கவிராஜன் வணங்கவில்லை! புவிராஜன் பாம்பு போலச் சீறினான்.

''வாரும் புலவரே, நீவிர் வணங்கா முடியோ?''

''ஆம்! இது இப்பொழுது வணங்கா முடியேதான்!'' என்று கூறிவிட்டு, மணிமகுடத்தைக் கழற்றி அருகில் வைத்துப் பின்னர், மன்னனை வணங்கி நின்றார்.

''ஓய் புலவரே, உமது செய்கையின் அர்த்தமென்ன? மணிமுடியை எடுத்துப் பின்னர் வணங்கினீரே, அதன் நோக்கமென்ன?'' என்று விக்கிராந்தன் வினவினான்.

''இந்த மணிமுடி, ராஜா விஜயபாலனால் பரிசளிக்கப்பட்டது. அதை அணிந்திருக்கையில் நான் உம்மை வணங்கினால், அம்மன்னர் வணங்கியது போலாகும். அவரது பராக்கிரமத்தை இழிவு படுத்திய செயலாகும் என்று எண்ணியே..''

இடைமறித்தான் விக்கிராந்தன். ''நாவை அடக்கும் புலவரே, என் கால் தூசு பெறுமா அந்த வணங்காமுடி?'' என்று கூறிய வண்ணம் ஆவேசத்துடன் அந்த மணிமுடியைக் காலால் எற்றிவிட்டான்.

புலவர் பொருமினார். அவரது முகம் கோபத்தினால் சிவந்தது. வாய் சுழித்தது; பேச வாயெடுத்தார். அதே கணம், ''நம்மை இழிவு படுத்திய புலவனைச் சிறையிலே போடுங்கள்!'' என்று பிறந்தது ராஜ கட்டளை. காவலாளி அந்தக் கட்டளையை நிறைவேற்றினான். புலவர் சிறையிலே கிடந்தார்.

செய்திக்குச் சிறகு உண்டு. ராஜா விஜயபாலன் சபைக்கு இச்செய்தி பறந்தது.

''ஆகா பெருத்த அவமானம்!'' என்றார் மந்திரி.

''பழிக்குப் பழி வாங்க வேண்டும்!''—உறுமினார் சேனாபதி.

விஜயபாலன் சொன்னான். ''மந்திரிப் பிரதானிகளே, உங்களது

ராஜ விசுவாசத்தைப் பாராட்டுகிறேன். ராஜா விக்கிராந்தன் நம்மை இகழவில்லை. தன் வழி போகின்ற யானையைப் பார்த்து, பூனை, 'நானே பலசாலி. என்னைப் பார்த்து, நீதான் ஓடுகிறாய்!' என்று சொல்லும். யானையை விடப் பெரியவன் என்று தன்னை எண்ணிக் கொள்ள பூனைக்கு உரிமையுண்டு. ஆனால் யானையின் காலடியிலே சிக்குண்டால் பூனையின் கதி என்னவாகும் என்பதை உலகம் அறியாமலா இருக்கிறது?'' ராஜா விஜயபாலனது பொறுமை நிறைந்த மொழி கேட்டு மந்திரிப் பிரதானிகள் அடங்கிவிட்டனர்.

விஜயபாலனது மொழிகள் ராஜா விக்கிராந்தன் செவிகளுக்குப் பறந்தன. அவன் சீறி எழுந்தான். ''நம்மைப் பூனை என்று இழிவுபடுத்திய விஜயபாலன்மீது புலி போல் பாய்ந்து, பழி தீர்த்துக் கொள்வோம். வாரீர், புறப்படுவோம்!'' படை திரட்டிக்கொண்டு கிளம்பினான் விக்கிராந்தன்.

விஜயபுரியை நோக்கி எதிரிப் படை திரண்டு வந்தது. விஜயபுரி வீரர்கள் துடித்து எழுந்தனர்; மக்கள் வீராவேசம் கொண்டு எழும்பினர். 'மன்னனைக் காக்க எம் உயிர் கொடுப்போம்' என்று வீரமொழி கூறினர். ஆனால் விஜயபாலன் சொன்னான்:

''என்னருமைப் பிரஜைகளே! வீரர்களே! என் ஒருவனைக் காக்க இத்தனை உயிர்கள் பலியாவதை நான் சகிக்கமாட்டேன். எனக்காக விஜயபுரி மண்ணோடு மண்ணாவதா? கூடவே கூடாது! எனக்கு ராஜ பதவியிலே மோகம் இல்லை. நானும் உங்களில் ஒருவனாக வாழவே விரும்புகிறேன். போர் வேண்டாம். பகையரசனை அன்புடன் வரவேற்போம். நல்லாட்சி நடந்தால் நம் எல்லோருக்குமே நன்மை உண்டல்லவா?''

''பகைவனிடம் இரக்கம் காட்டுவதா?'' என்றார் மந்திரி.

''வாளேந்தி வருபவனுக்கு வாளே பதில் கூறவேண்டும்!'' என்றார் சேனாபதி.

''ஆமாம்! ஆமாம்!'' என்று குதித்தனர் வீரர்கள்.

போர் மூண்டது. எதிரிப்படை கடல்போல ஆர்ப்பரித்து வந்தது. விஜயபுரி வீரர்கள் வீராவேசத்துடன் எதிர்த்து நின்றனர். வாளொடு வாள்கள் மோதி உடைந்தன. ஈட்டிகள் பாய்ந்தன. வீரர்கள் வீழ்ந்தனர். குதிரைகள் பாய்ந்தன; குத்துண்டு சாய்ந்தன. எங்கும் வீரர்களின் கூக்குரல்! வாட்களின் ஓசை! மாண்டவர் ஆயிரமாயிரம்; காயம் அடைந்தவர் கணக்கிலர்!

ராஜா விஜயபாலன் வாளை ஏந்தவில்லை. போர்க்களத்தில் வளைய வருகிறான். தன்னுடைய பாதுகாப்பைப் பற்றியே சிந்தனை இல்லை அவனுக்கு. காயம்பட்டு விழுந்த வீரர்களுக்கு - அவர்கள் பகை வீரர்களாயினும் சரி - அவர்களுக்கெல்லாம் வேண்டிய உதவி செய்து வந்தான். பல உயிர்களைப் பாதுகாத்தான். கடைசியில், விஜயபுரி சேனாபதி விழுந்தான். படை சிதறி ஓட ஆரம்பித்தது.

அதே கணம், விஜயபாலன் அருகே உயிரிழந்த வீரர்களிடையே ஓர் அழுகுரல் கேட்டது. ''ஐயோ தாகம்! தண்ணீர்!'' என்ற தவிப்புக் குரல் கேட்டு, ஓடினான் விஜயபாலன். பகையரசன் விக்கிராந்தன் அடிபட்டுக் கிடப்பதைக் கண்டான். விழுந்து கிடக்கும் மன்னனிடம் விஜயபாலனுக்கு இரக்கம் உண்டாயிற்று ஓடிப் போய் தண்ணீர் எடுத்து வந்து, வாயில் ஊற்றினான். தன்னைக் காப்பாற்றி, தன் உதவிக்கு வந்தவனைக் கண்டான் விக்கிராந்தன். அவன் கண்கள் குளமாயின.

அப்பொழுது எதிரிப் படைவீரர்கள், அந்தப் பக்கமாக ஓடி வந்தனர். ராஜா விஜயபாலனைக் கண்டதும், அவன் மீது பாய்ந்தனர். அதே கணம், எங்கிருந்தோ ஒரு குதிரை வீரன் பாய்ந்தோடி வந்து, விஜயபாலனைத் தன் குதிரையிலே ஏற்றிக்கொண்டு மறைந்தான்.

விஜயபுரிப் படை சிதறுண்டது. எதிரிப்படை வெற்றி கண்டது. விஜயபுரி பிடிபட்டது. 'வெற்றி வீரன் விக்கிராந்தன் வாழ்க' என்று எதிரிகள் ஆர்ப்பரித்தனர்.

காயமடைந்த விக்கிராந்தன் நாளடைவில் தேறி எழுந்தான். விஜயபுரி சிங்காதனம் ஏறினான். மங்கள வாத்தியங்கள் முழங்கின. சிங்காதனத்திலே அமர்ந்த விக்கிராந்தன் கூறினான்: ''நமது படை பலம் கடல் போன்றது. வெற்றி கண்டோம்; விழாக் கொண்டாடுகிறோம்! ஆனால் ஒரு காரியம். நமது விரோதி ராஜா விஜயபாலன் தப்பி ஓடி மறைந்திருக்கிறான்! வீரர்களே விஜயபாலன் எங்கே? அவனைப் பிடித்து வாருங்கள். பிடித்து வருபவருக்குப் பரிசு வழங்குவோம்!'' என்றான்.

நாடெங்கும் பறை முழங்கிற்று. நாட்கள் சென்றன. ராஜா விஜயபாலன் பிடிபடவில்லை. பரிசுத் தொகை ஏறிக்கொண்டு சென்றது.

ஒரு நாள் -

ஒரு விறகுவெட்டியும், பேரனுமாக ஒரு மலைக் குகை வாயிலில் மழைக்காக ஒதுங்கினார்கள்.

''தாத்தா, இதென்ன பிழைப்பு! விறகுவெட்டும் பிழைப்பு! உழைத்து உழைத்து உடம்பு ஓடாக ஆகிறது. உழைப்புக்கு மதிப்பு இல்லை. உழைப்பில்லாமல் எல்லாரும் ஊதிப் போறாங்க விக்கிராந்தன் ஆட்சியிலே!'' இவ்வாறு அலுத்துக் கொண்டான் பேரப்பிள்ளை.

''தம்பி, அலுத்துப் போகாதே. உழைப்புக்கு என்றைக்குமே மதிப்பு உண்டு. இன்னிக்கு உழைப்பை மறந்து, ஊரு உறங்கிக் கிடக்கு. நாளை ஒரு நாள், விழிக்காமலா போகும்?'' என்றான் கிழவன்.

''உறங்கிக் கிடக்கிற ஊரு விழிச்சா, நம்மையா கவனிக்கப் போகுது? பணம் வேணும் தாத்தா, பணம்! ராஜா விஜயபாலனைப் பிடிச்சாலாவது பணம் கிடைக்கும். அவரு நம்ம கையிலே அகப்படக்

கூடாதா?'' என்று அங்கலாய்த்தான் பேரப்பிள்ளை.

''இதோ இருக்கிறேன், பிடித்துக்கொள்ளுங்கள்!'' என்று ஒரு குரல் பின்புறமாக எழுந்தது. கிழவனும் பேரப் பிள்ளையும் திடுக்கிட்டுத் திரும்பவே, ராஜா விஜய பாலன் அவர்களிடம் வந்தான். முகத்திலே புன்னகை பரவ, அரசன் கூறினன்: என்னைக் கொண்டுபோய், ராஜா விக்கிராந்தனிடம் நிறுத்துங்கள். உங்களுக்குப் பரிசு கிடைக்கும். வறுமை நீங்கிச் சுகமே வாழலாம்!

கிழவனும் பேரப் பிள்ளையும் அரசனை வணங்கினர். குரல் தழுதழுக்க கண்களில் நீர் ததும்ப, கிழவன் சொன்னன்; மகாராசா, உங்களைக் காட்டிக் கொடுத்து, நாங்கள் வாழவா? அந்த வாழ்வு எங்களுக்கு வேண்டவே வேண்டாம். மகாராசா! இங்கே எதிரிகள் நடமாட்டம் இருக்கு; நீங்க ஓடிப் போயிடுங்க, மகாராசா!

''இல்லை. இன்று ஓடினலும், என்ருவது ஒரு நாள், பிடிபட்டுத்தான் போவேன். என்னல் உங்களுக்குச் சுக வாழ்வு கிடைப்பதானல், அதைவிட வேறு பாக்கியம் எனக்குக் கிடையாது. பெரியவரே, என்னை நீங்கள் அழைத்துப் போகாவிடில், நானே அரசனிடம் சென்று, உங்களால் பிடிபட்டதாகவே கூறுவேன்!'' என்ருன் விஜயபாலன்.

கிழவன் கண்ணீர் வடித்தான். தப்பியோடும்படி மன்ருடினன். விஜயபாலன் தன்னை அழைத்துப் போகும்படி வேண்டினன். ''மாட்டவே மாட்டேன், மகாராசா!'' என்று கிழவன் வாதாடிக் கொண்டிருந்தான்.

அதே சமயம், சில வீரர்கள் ஓடி வந்து, அவர்களை வளைத்துக் கொண்டனர். விஜயபாலன் பிடிபட்டான்.

ராஜா விக்கிராந்தன் முன்னிலையிலே, கைதியாக நின்ருன் விஜய பாலன். அவன் பக்கத்திலே அவனைப் பிடித்தவர்கள் நின்ருர்கள். கூட்டத்தின் பின்னல் கிழவன் நின்று, கைதிக்காகக் கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தான்.

''உங்களில் யார் மன்னன் விஜய பாலனைப் பிடித்து வந்தவர்?'' என்று வினவினன் விக்கிராந்தன். ''நான்தான்!'' என்ருன். ''இல்லை நானே பிடித்தவன்!'' என்ருன் மற்ருெருவன். ''இல்லை நான்தான்! நானேதான்'' என்று ஒவ்வொருவரும் அடி பிடி போட்டுக் கொண்டார்கள்.

ராஜா விக்கிராந்தன் கைதியிடம் திரும்பினன். ''கைதி, உமது முடிவு என்ன? இவர்களில் உம்மைப் பிடித்தவர் யார்?'' என்று வினவினன். கைதியாக நின்ற ராஜா விஜயபாலன் கம்பீரமாகக் கூறினன்: ''வேந்தே, என்னை முதலில் கண்டு பிடித்தவர், இவர்களில் யாருமே இல்லை. அதோ வாய் திறவாமல் இவர்களுக்குப் பின்னல் நிற்கிருரே, அந்தக் கிழவர்தான் என்னைப்



''சே..சே..சே! வர வர காலம் ரொம்ப மோசமாகப் போயிட்டுது. தேங்காயை உடைக்கிருங்க, நமக்கு ஓடுதான் மிஞ்சறது. கொழுக்கட்டை பண்ணிக் கண்ணிலே காட்டிப்புட்டு எடுத்துண்டு போயிடருங்க. வாழைப் பழத்தைக் கிள்ளிக் காட்டருங்க.. இப்படியே போய்க்கொண்டிருந்தால் என் உடம்பு துரும்பாகப் போயிடும்போல இருக்கே!''



ஜம்பு: நான் நேற்று மாலை மாடியிலிருந்து விழுந்து விட்டேண்டா!

கிட்டு: அப்படின்னு நன்னு காயம் பட்டிருக்குமே?

ஜம்பு: அதான் இல்லை. நான்தான் பாதியிலேயே விழித்துக் கொண்டுவிட்டேனே!

—பு. வைத்தியராமன்,
திருக்காட்டுப்பள்ளி.

பிடித்தவர். பரிசுத் தொகை அவருக்கே உரியது!'' என்றான்.

ராஜா விக்கிராந்தன் கிழவனைத் தன் அருகே அழைத்தான்; கிழவன் முழு விவரத்தையும் சொன்னான். பொய் கூறிய வீரர் பக்கம் திரும்பினான், ராஜா விக்கிராந்தன். புருவம் நெறிந்தது. கோபம் கண்களில் தெறித்தது. ''மந்திரி, இந்த அற்பர்களை, சந்தர்ப்பவாதிகளை, பொய்யர்களைப் பாதாளச் சிறையிலே போடுங்கள்!'' என்று கர்ஜனை செய்தான்.

பின்னர், புன்முறுவலுடன் திரும்பி, விஜயபாலனை நோக்கினான். ''இந்த ஓர் ஏழைக்காக, நீங்கள் இந்த ஆபத்தைத் தேடிக் கொண்டது விந்தையிலும் விந்தை!'' என்றான்.

இடைமறித்து ராஜா விஜயபாலன் சொன்னான்: ''ஆபத்து அல்ல, ஆனந்தம் என்று கூறுங்கள். பிறர் சுகவாழ்வுக்காகத் தியாகம் செய்வது மனிதன் கடமை. அந்தக் கடமையை ஆற்றுவதிலே பேரானந்தம் காணலாம்! அநுபவித்தவருக்கே அந்த ஆனந்தம் தெரியும்!''

இதைக் கேட்ட ராஜா விக்கிராந்தன் என்ன செய்தான் தெரியுமா? அப்படியே ராஜா விஜயபாலனது கால்களிலே விழுந்து வணங்கினான். ''தியாக மூர்த்தியே, உங்களைப் போன்ற உத்தமர்களால்தான் உலகமே வாழ்கிறது. அன்று, நான் போர்க்களத்திலே குற்றுயிராய் விழுந்து கிடந்தபோது, நீங்கள் என்னை எளிதில் முடித்திருக்கலாம். ஆனால், தாங்கள் எனக்கு உதவ முன் வந்தீர்கள். இது போன்று பகைவனுக்கு அருளும் நெஞ்சு ஒரு மகாத்மாவுக்கே உண்டு! உங்களை மீண்டும் சந்திக்க எண்ணினேன். அதற்காகவே, இந்தப் பரிசுத் திட்டத்துக்கு ஏற்பாடு செய்தேன்!''

கூடியிருந்த மக்கள் பேராச்சரியம் கொண்டனர். ராஜா விக்கிராந்தன் மேலும் சொன்னான்; ''என் உயிர் நண்பரே, நான் கண்ட வெற்றி, உண்மையில் வெற்றியல்ல: உங்கள் அன்பினால், தாங்களே என்னை வென்றுவிட்டீர்கள். உண்மையில் தாங்களே வெற்றி வீரன்!'' என்று ஆவேசத்தோடு கூறிவிட்டு, ராஜா விஜயபாலனது காலடியிலே மீண்டும் விழுந்து. மன்னிப்புக் கோரினான் ராஜா விக்கிராந்தன்.

''செய்த குற்றத்துக்காக உண்மையில் வருந்தி, மன்னிப்புக் கோருபவன், நிச்சயம் மன்னிக்கப்படுவான்!'' இவ்வாறு கூறிய வண்ணம், ராஜா விஜயபாலன், விக்கிராந்தனை எழுப்பி, அன்போடு அணைத்துக்கொண்டான்.

இந்த மாறுதலைக் கண்ட சபையினர், ஆச்சரியத்தில் மெய்ம் மறந்துவிட்டனர்.

கிழவனுக்குப் பரிசு கிடைத்தது. ராஜா விஜயபாலன் மீண்டும் சிங்காதனம் ஏறினான். நாடெங்கும் வெற்றி விழா கொண்டாடினார்கள்.

சைனா ச்சூ



ஆர்வி

சீனனுக்கு அந்தக் குழப்பத்தின் நடுவிலும் ஒரு விஷயம் மிகுந்த ஆறுதலைக் கொடுத்தது. அது என்ன தெரியுமா? அதுதான் பக்கிரி அவனுடைய சொந்தச் சிற்றப்பன் இல்லை என்பது. அவனைத் தன் சிற்றப்பன் என்று சொல்லிக்கொள்ள அவனுக்கு எப்போதுமே அருவருப்பாகத்தான் இருந்தது. காளியைச் சின்னம்மா என்று அழைக்க அவன் விரும்பியதேயில்லை. இருவருடைய குணமும் அவனுக்கு வெறுப்பைத் தந்தது. 'இவன் எனக்கு ஒரு சிற்றப்பனாக வந்து வாய்த்தானே!' என்று அவன் எத்தனையோ முறை ஷங்கங்கிடம் சொல்லிச் சொல்லி வேதனைப்பட்டிருக்கிறான். இப்போது அந்த வேதனை மறைந்துவிட்டது. அப்படியானால் சின்னப் பக்கிரி யார்? அவனிடம் சீனன் எப்படி வந்து சேர்ந்தான்!

அது ஒரு தனிக் கதை. அதைத் தெரிந்துகொண்டபின் போவதாக இருந்தால் கிங்கிங் ஏறிச் செல்லவிருந்த 'ஜல-கங்கா' போய்விடும்.

ஆகவே இன்ஸ்பெக்டர் துரைராஜுடனும் அவர் கோஷ்டியுடனும் சீனனும் ஷங்கங்கும் புறப்பட்டுச் சென்றார்கள். கிங்கிங்கை அடையாளம் காட்ட வேண்டுமே!

கப்பல் புறப்படுவதற்குமுன் இப்படி ஒரு துரதிருஷ்டம் தனக்கு நேரும் என்று கிங்கிங் எதிர்பார்க்கவேயில்லை. எதற்காகப் பெரிதும் பாடுபட்டானோ அது அவனுக்குக் கிடைத்துவிட்டது என்று அதைப் பத்திரப் படுத்திவிட்டு ஆனந்தப்பட்டுக்கொண்டிருந்தான். ஆச்சு; இன்னும் சரியாக அரைமணி நேரந்தான். அப்புறம் அவனை யார் என்ன செய்ய முடியும்? கப்பல் துறைமுகத்தைக் கடந்துவிட்டால் அவனை யாரும் ஒன்றும் செய்ய முடியாது. அவனுக்கு வேண்டியதெல்லாம் அந்தப் பெட்டி ஒன்றுதான். கிழவருடைய சொத்துக்கள் அவனுக்குக் கிடைக்காததைப் பற்றிக்கூட அவனுக்கு வருத்தமில்லை. அந்தப் பெட்டி இப்போது தன்னிடம் இருப்பது வேறு ஒருவருக்கும் தெரியாது என்றே அவன் எண்ணினான். பக்கிரிக்குத் தெரிந்ததும் ஒன்றுதான்; தெரியாததும் ஒன்றுதான். இனி அவன் எங்கே தன்னைப் பார்க்கப் போகிறான்! தன்னுடைய பெயர்கூட அவனுக்குச் சரியாகத் தெரியாது.

கிங்கிங் இருந்த கப்பல், வியாபாரக் கப்பல். சரக்குகளை இறக்கி ஏற்றிக்கொண்டு அது நேராகச் சிங்கப்பூர் போகவேண்டும். கப்பலில் ஏறியதுமே அநேகமாக அவன் தன் ஊர் போய்ச் சேர்ந்துவிட்டதாகவே எண்ணினான். அந்த உற்சாகத்தில் கப்பலின் தளத்திலே வந்து நின்று கடலையே வென்றுவிட்டவன்போல் சீட்டியடித்தான். ஆனால் அவனுடைய உற்சாகத்தைத் தடுப்பதுபோல் கப்பல் சிப்பந்தி ஒருவன் ஓடிவந்து, ''ஸார்! யாரோ உங்களைப் பார்க்க வேணுமாம்;

காப்டன் கூப்பிடுகிறார்!'' என்று கூறினான்.

''என்னையா? எதற்காக?''

''உங்களைத்தான்! எதற்காக என்று தெரியாது!'' என்றான் சிப்பந்தி. ஆயினும் அவன் முகத்தில் இருந்த கலவரத்தை அவன் உணர்ந்து கொண்டுவிட்டான்.

''யாராவது அவரோடுகூட இருக்கிறார்களா?''

இதற்கு அந்தச் சிப்பந்தி எதையும் குறிப்பாகச் சொல்லாமல் தலையை மட்டும் அசைத்தான். இந்த நேரத்தில் கப்பல் காப்டன் அழைப்பது என்றால் அது சாதாரணமான விஷயம் அல்ல. ஆகவே அவன் நெஞ்சு துணுக்குற்றது. உடனே அவன், ''சரி, நீ போ! இதோ வருகிறேன்!'' என்று சொல்லிவிட்டு, தன்னுடைய காபினை நோக்கி அவசர அவசரமாக ஓடினான். ஜன்னல் வழியே பார்த்தபோது மோட்டார்ப் படகு நிற்பது தெரிந்தது. அவன் தலையை உள்ளுக்கு இழுத்துக்கொண்டு விட்டான்.

அங்கே அவனுடைய வேலைகளை முடித்துக் கொள்ள ஐந்து நிமிஷம் கூட ஆகவில்லை. அவன் காபினைச் சாத்தி மூடிக்கொண்டு திரும்பிய போது, ''நீங்கதானா கிங்கிங் என்பது?'' என்று ஒரு குரல் மிடுக்காகக் கேட்டது.

அவன் அதை எதிர்பார்க்கவில்லை. அப்படிக் கேட்டவரைக் கண்டதும் அவனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. ஏனெனில் அவருடைய கையில் இருந்த சுழல் துப்பாக்கி அவர் யாராக இருக்கும் என்பதைக் காட்டிவிட்டது.

''எங்கே, அதை இப்படிக் கொடுங்கள்!'' என்று நிதானமாக, உறுதியாகக் கேட்டார், துப்பாக்கியை வைத்திருந்த மனிதர்.

''எதை?'' என்றான் கிங்கிங்.

அதிகம் வளர்த்துவானேன்? அவன் தன் கால்சட்டைப் பையில் ஒளித்து வைத்திருந்த கைத் துப்பாக்கியை, துறைமுகப் பாதுகாப்பு இன்ஸ்பெக்டர் முதலில் வாங்கிக்கொண்டு விட்டார். இதன் பிறகு நடந்ததையெல்லாம் விரிவாகச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அடுத்த அரைமணி நேரத்துக்குள் கிழவரைத் தாக்கிய குற்றத்துக்கும், பிறர் பொருளை அபகரித்த குற்றத்துக்கும், பாரிஸ்டர் வீட்டில் துராக்கிருதமாக நுழைந்து பிளானைத் திருடிய குற்றத்துக்கும் இன்னும் பக்கிரியோடு சேர்ந்து செய்த சதிகளுக்குமாக அவன் அந்த இடத்திலேயே, கப்பல் காப்டன் முதலானோர் முன்னிலையில் இன்ஸ்பெக்டர் துரைராஜினால் கைது செய்யப்பட்டான். அவனுடைய உடைமைகள் யாவும் அந்த இடத்திலேயே பறிமுதலாயின. ஆனால் என்ன தேடியும் அவர்கள் தேடிவந்த அந்த சு-சூ பெட்டியை மட்டும் காணவில்லை.

''அது எங்கே?'' என்றார் இன்ஸ்பெக்டர்.

''எனக்கு என்ன தெரியும்?'' என்றான் கிங்கிங்.

''சரி; ஆனால் இந்த நீலப் பிளான் உன்னிடம் எப்படி வந்தது?''

''எப்படி என்று என்ன கேள்வி? அது என்னுடைய பிளான். என்னிடம் இருக்கிறது'' என்றான் கிங்கிங்.

இன்ஸ்பெக்டருக்கு அதற்குமேல் அவனை என்ன கேட்பது என்று புரியவில்லை. ''பக்கிரியை அழைத்து வந்தால்தான் இவன் வழிக்கு வருவான்'' என்று அவர் மாஸ்டர் சீனனைப் பார்த்துக் கூறினார்.

''ஸார்! எனக்கு ஒரு சந்தேகம்!'' என்றான் ஷங்கங்.

''சட்..நீ சித்தே சும்மா இருப்பா! உனக்கு எப்பவும் ஏதாவது சந்தேகம் வந்துகிட்டே இருக்கும்!'' என்றார் துரைராஜ்.

ஷங்கங் உடனே சீனன் காதருகில் ஏதோ சொன்னான். சீனன் முகம் வியப்பினால் விரிந்தது.

''சரி ஸார்! நீங்க இந்த ஆளோடு முன்னால் போங்க. நாங்க இப்படி இந்த வழியாகச் சுற்றிப் பார்த்துக் கொண்டு வருகிறோம்'' என்று சொல்லிவிட்டு, சீனனும் ஷங்கங்கும் புறப்பட்டார்கள்.

போலீஸ் ஸ்டேஷனில் தனக்கு முன்னால், பக்கிரி கையில் விலங்

குடன் உட்கார்ந்திருப்பதைப் பார்த்ததுமே கிங்கிங் இடிந்து போனான்.

"அட முட்டாளே!" என்று கத்தினான் கிங்கிங்.

"அட மோசக்காரா?" என்று கறுவினான் பக்கிரி.

* * *

சீனனுடைய மூளையைக் குழப்பிய விஷயங்களுக்கு விளக்கமே கிடைக்காமல் போயிருக்கலாம்.

ஆனால் மிகப் பெரிய யந்திரத்தை ஒரு சிறு விசை இயக்குவதுபோல, ஷங்கங்குடைய விசித்திரமான அற்ப சந்தேகம் அந்தப் பெரிய புதிர்களை விடுவிக்கக் காரணமாக இருந்தது. இன்ஸ்பெக்டர் துரைராஜ் அதன் அருமை புரியாமல் அலட்சியம் செய்தாரே தவிர, சீனன் அப்படி அலட்சியம் செய்யவில்லை.

ஷங்கங்குக்குத் தோன்றிய அந்தச் சந்தேகம் இதுதான்.

யாருக்கும் பார்த்தவுடனேயே ஏற்படக்கூடிய சந்தேகம்தான் அது. அந்தக் கப்பல் வியாபாரச் சரக்குகள் ஏற்றும் கப்பல். அதுவும் கிங்கிங்குடைய காபினுக்கு முன்னால் வந்து நின்றால் ஏற்றுமதி செய்யப்பட்ட சரக்குகள் எல்லாம் கீழ்த் தளத்தில் அடுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அதையே இன்னும் சற்று ஊன்றிப் பார்த்தால் பெரிய பெரிய கள்ளிப் பெட்டிகளுக்கு இடையே ஒரு கோணிப்பை ஒளித்து வைக்கப்பட்டிருப்பது தெரியும். பக்கத்துப் பெட்டியின் மேல் பலகை கழற்றப்பட்டிருப்பதும் தெரியும். மறுநாள் பார்த்திருந்தால் கோணிப்பை மறைந்திருக்கும். அதாவது நடுக் கடலில் போய் விழுந்திருக்கும். அதை யார் செய்திருப்பார்கள்? கிங்கிங்தான் செய்திருப்பான்!

ஏனெனில் கள்ளிப்பெட்டியின் மேல் பாகத்தைக் கழற்றியவன் அவன்தான். அதிலிருந்த கைலித் துணிகளில் சிலவற்றை வெளிப்படுத்தி கோணியில் அடைத்தவனும் அவன்தான். கைலித் துணிகளை அப்புறப் படுத்திய காலி இடத்தில் ஒரு சிவப்புப் பெட்டியைப் பூட்டிச் சீலிட்டு, விலாசம் ஒட்டிப் பதுக்கி வைத்தவனும் அவனே. அதன் மேல் இப்படி எழுதப்பட்டிருப்பதைக் காணலாம்: "இந்தப் பெட்டியை சிங்காரவேலன், 111, டாஞ்சோங் தெரு, சிங்கப்பூர் என்ற விலாசத்தில் சேர்ப்பிக்கவும்."

அந்தப் பெட்டியை கிங்கிங் அங்கே பதுக்கி வைத்தான் என்பது ஷங்கங்குக்கு எப்படித் தெரியும்? அது வெறும் ஊகம்தான். கோணியைப் பார்த்த ஷங்கங் முதலில் சாதாரணமாகத்தான் சந்தேகப்பட்டான், அதனுள் அவர்கள் தேடும் பொருள் இருக்குமோ என்று. ஆனால் சீனனும் அவனும் போய்ப் பார்த்தபோது அதனுள் ஏழெட்டுக் கைலித் துணிகளே இருந்தன. பக்கத்துப் பெட்டியின் மேல் ஆணி கழற்றப்பட்டிருந்தது. அந்தப் பலகையை மீண்டும் ஆணி வைத்து அடிக்கவில்லை. காரணம் கழற்றிய ஆணி பக்கத்திலேயே வளைந்து கிடந்தது. அது உபயோகப் படாததால் வேறு நல்ல ஆணி கொண்டுவந்து அடிப்பதற்காக அப்படியே பெட்டியை மூடியதுபோல் விடப்பட்டிருந்தது. சீனன் அந்தப் பலகையை மெதுவாகத் தொடவே அது நகர்ந்தது. ஷங்கங் எட்டிப் பார்த்தான். முன்பு ஹோட்டலில் சீனன் வைத்திருந்த சிவப்புப் பெட்டி அதனுள்ளே இருப்பது தெரிந்துவிட்டது. பழம் நழுவிப் பாலில் விழ, அதுவும் நழுவி வாயில் விழுந்த கதையாக முடிந்தது அவனுடைய சந்தேகம். கிங்கிங்கினுடைய மூளை அபாரமாகத்தான் வேலை செய்திருக்கிறது. ஆனால் அதைவிட ஷங்கங்குடைய சந்தேக மூளைதான் சீனனுக்கு உயர்வாகப் பட்டது. இருவரும் அந்தப் பெட்டியை எடுத்துக்கொண்டு இன்ஸ்பெக்டரோடு போய்ச் சேர்ந்து கொண்டார்கள்.

* * *

சிங்கப்பூர் சிங்காரவேலன் வீட்டில் ஆண்பிள்ளைகள் யாருமில்லை. ஒரே ஓர் அம்மாள்தான் பைத்தியம் பிடித்த நிலையில் கிட்டத்தட்ட

கைதிபோல இருந்து வந்தாள். அவளுக்குத் துணையாக ஒரு பர்மாக்காரி மட்டுமே இருந்தாள், அந்தப் பர்மாக்காரியின் வேலை என்னவென்றால் அந்தம்மாளுக்கு வேளா வேளைக்குச் சமைத்துப் போடுவது; அந்த அம்மாள் வெளியில் எங்கும் போகாமல் பார்த்துக் கொள்வது. அவ்வளவுதான். பர்மாக்காரிக்குத் தமிழ் தெரியாது; அந்த அம்மாளுக்குப் பர்மிய மொழி தெரியாது. எல்லாம் சைகை மூலமாகவும் உத்தேசமாகவும்தான் நடந்தன.

தமிழ் தெரிந்தவர்கள் யாரும் அந்த வீட்டிலேயே நுழைய முடியாது. காரணம், அந்த வீட்டின் எஜமான் அடிக்கடி வெளியூர் போய்விடுவதால், யார் வந்தாலும் அப்புறம் வந்து பார்க்கும்படி பர்மாக்காரி சைகை மூலமாகவே திருப்பி அனுப்பிவிடுவாள்.

அந்த வீட்டு எஜமான்தான் சிங்காரவேலன். சிங்காரவேலனுக்கும் கிங்கிங்குக்கும் என்ன சம்பந்தம் என்பதை அறிந்து கொண்டால், கிட்டத் தட்ட எல்லா மர்மங்களும் தெரிந்த மாதிரிதான்.

கிங்கிங் கைது செய்யப்பட்ட பதினைந்தாவது நாள் இரண்டு இளம் வாலிபர்கள் அந்த வீட்டில் நுழைந்து கதவை இடித்தார்கள். பர்மாக்காரி கதவைத் திறந்தாள். வழக்கம்போல அப்புறம் வரும் படிக் கூறினாள்.

அந்த வாலிபர்களில் ஒருவன் உடனே நூறு ரூபாயை எடுத்து அவளிடம் கொடுத்து, ''சிங்கார வேலன் கொடுக்கச் சொன்னார்.



அவர் வரும்வரையில் எங்களை இங்கே இருக்கச் சொன்னார்'' என்று சிவப்புப் பெட்டி ஒன்றைக் காட்டினான்.

ஆம்; அவர்கள் சீனனும் ஷங்கங்கும்தான். அவர்கள் காட்டிய பெட்டிதான் கிங்கிங்குடைய பெட்டி. அதைப் பார்த்ததும் பர்மாக்காரி தடை ஒன்றும் சொல்லாமல் நூறு ரூபாயை வாங்கிக் கொண்டு விட்டாள். சீனனும் ஷங்கங்கும் உள்ளே போனார்கள். அவர்கள் அங்கே கண்டகாட்சி! சுவரிலே கிங்கிங்கினுடைய பெரிய படம் ஒன்று மாட்டியிருந்தது. இரண்டு பக்கத்திலும் ஒரே சாயலாக இருந்த இரண்டு பேருடைய படங்கள் மாட்டப்பட்டிருந்தன. அவற்றில் ஒரு படத்தைப்



பார்த்தபோது அவர்களுக்கு உண்மையிலேயே தூக்கிவாரிப் போட்டது. அது சீனனுக்குத் தம் சொத்துக்களை யெல்லாம் வழங்கிவிட்ட அந்தக் கிழவருடைய படம்தான்.

''சீனு! அது அந்தத் தாத்தாவுடைய படம்டா!'' என்றான் ஷங்கங்.

''ஆமாண்டா!'' என்றான் சீனன்.

அப்போது அவர்களையே பின்னால் நின்றுகொண்டு இரண்டு விழிகள் ஆச்சரியத்தோடு கவனிப்பதை அவர்கள் உணரவில்லை. ''ஆமா! நீங்கள்ளாம் யாரு?'' என்று தமிழிலே ஒரு குரல் கேட்டபோது அவர்கள் இரண்டுபேரும் திடுக்கிட்டுத் துள்ளி விழுந்தார்கள்; திரும்பிப் பார்த்தார்கள். அந்த அம்மாள் இருந்த பரிதாபகரமான நிலையைக் கண்டு விழித்தார்கள்.

''நாங்கள் சென்னையிலிருந்து வந்திருக்கிறோம்'' என்றான் ஷங்கங்.

''அந்தக் கிழவரைத் தெரியுமா உங்களுக்கு?''

''தெரியும்..''

''அவர் எப்போ வருவார்?''

''இனிமே வர மாட்டார். அவர் செத்துப் போய்விட்டார்.''

இதைக் கேட்டதுமே அந்த அம்மாள் 'ஹோ' என்று அழத் தொடங்கிவிட்டாள். அவளைச் சமாதானப் படுத்தப்பட்ட பாடு பெரும் பாடாகிவிட்டது.

''இந்தப் படத்தில் இருப்பவன் யார்?'' என்று வேண்டுமென்றே கிங்கிங் படத்தைக் காட்டிக் கேட்டான் ஷங்கங்.

அந்த அம்மாள் உடனே நடு நடுங்கிப் போய்விட்டாள். பதிலே சொல்லவில்லை.

''இதிலே ஏதோ மர்மம் இருக்கு போலிருக்குடா. சீனு, நாம் சாமர்த்தியமாக நடந்துகொள்ள வேணும். இன்னும் ஒரு நூறு ரூபாயைக் கொடுத்து அந்த வேலைக்காரியை நைஸாக அனுப்பினால் எல்லாம் தெரிந்து கொள்ளலாம்'' என்றான் ஷங்கங்.

அவர்கள் எண்ணிய காரியம் பலித்துவிட்டது. பர்மாக்காரி ஒரு நாள் ஓய்வும் அதே சமயத்தில் பணமும் கிடைத்த சந்தோஷத்தில் போய்விட்டாள். ஷங்கங் கிழவர் இறந்ததையும் சீனன் அவருடைய சொத்துக்களுக்கு இப்போது சொந்தக்காரன் என்பதையும் சொல்லி அந்த அம்மாளிடம் ஜாக்

கிரதையாகப் பேசினான்.

ஒரு சாயலாக இருந்த இரண்டு பேரும் அந்தக் கிழவரும் அவருடைய தம்பியும்தான். கிழவருக்கு ஒரே மகன். அவருடைய தம்பிக்கும் ஒரே மகன். அந்த அம்மாள்தான் கிழவருடைய மருமகள்.

கிழவர் பாடுபட்டு ஏராளச் சொத்துக்கள் சேர்த்தார். அவர் தரிசாக வாங்கிய இடமெல்லாம் இப்போது முக்கியமான கடைத் தெருவாகப் போய்விட்டது. நூறு ரூபாய்க்கு வாங்கிய தரிசு பதினாயிரம் இருபதினாயிரம் என்று விலை ஏறிவிட்டது. திடீரென்று அவர் பெரும் பணக்காரராகி விட்டார். சென்னையிலும் சிங்கப்பூரிலுமாக மாறிமாறி இருந்தார். ஆனால் அவருடைய தம்பி அவரிடமே வேலைக்கு இருந்தார். நோயாளியாக இருந்து, ஒரே மகனை விட்டுவிட்டு, கடைசியில் இறந்தும் போய்விட்டார். கிழவர்தான் அவர் மகனையும் கவனித்து வந்தார். கிழவருடைய மகன் அதாவது அந்த அம்மாளுடைய கணவர் ஒரு சமயம் வியாபார நிமித்தமாக ஜாவாவுக்குப் போனார். போன இடத்தில் அவருக்கு எதிர்பாராத அதிருஷ்டம் ஒன்று அடித்தது. அவர் கடை வைப்பதற்காக வாங்கிய இடத்தில் பெரிய புதையல் ஒன்று கிடைத்தது. ஆனால் அந்தப் புதையலைக் கொண்டு வர முடியவில்லை. காரணம் அவர் தனியாக இருந்தது தான். அதற்காக அதைப் பத்திரமாக ஓர் இடத்தில் புதைத்து வைத்துவிட்டு அவர், தம் சிற்றப்பா மகனை அழைத்துப் போவதற்காகச் சிங்கப்பூர் வந்தார். அப்போது அந்த அம்மாளுக்குப் பிரசவ சமயம். வீட்டிலே பெண் துணை யாரும் இல்லை. அவர்கள் வீட்டு வேலைக்காரனுக்கு ஒரு மனைவி இருந்தாள். அவளைத் துணையாக வைத்திருந்தது. கிழவர் அப்போது சென்னை போயிருந்தார். ஆண் பிள்ளைகள் யாரும் இல்லாத சமயம் அந்த அம்மாள் பிரசவித்தாள். அந்த அம்மாளுக்குச் சுய நினைவே இல்லை அப்போது. ஏழெட்டு நாட்கள் வரையில் அவளுக்குப் பிரக்ஞையே வரவில்லை. கடைசியாகப் பிரக்ஞை வந்தபோது அவளுக்கு ஓர் இடி காத்திருந்தது. பிறந்த குழந்தை இறந்து போய்விட்டது என்று அந்த வேலைக்காரி சொல்லிவிட்டாள். கிழவருடைய தம்பி மகனும் அதையேதான் சொன்னான். ஆகையால் அதை எல்லாரும் நம்பிவிட்டார்கள். ஒரு வருஷம் வரை யாரும் எங்கும் போகவேண்டாம் என்று சொல்லிவிட்டார் கிழவர். பிறகு கிழவருடைய மகனும், அவருடைய தம்பி மகனும், புதையல் நிதியை எடுத்துவர ஜாவாவுக்குப் புறப்பட்டார்கள்.

போய் ஒரு மாதம் வரையில் ஒரு தகவலும் வரவில்லை. திடீரென்று ஒருநாள் கிழவருடைய தம்பி மகன் சிங்காரவேலன் மட்டும் திரும்பி வந்தான். அழுதுகொண்டே வந்தான். கிழவருடைய மகன், அதாவது அந்த அம்மாளுடைய கணவர், நோய்கண்டு இறந்துவிட்டார் என்றும் புதையலை எடுத்துவரவில்லை என்றும் துக்கப்பட்டான்.

இது மற்றோர் இடியாகக் கிழவரையும் அந்த அம்மாளையும் தாக்கியது. அதிலிருந்து அந்த அம்மாளுக்குப் புத்தியே கலங்கிவிட்டது.

கொஞ்ச நாட்களுக்கு முன்வரையில் ஏழெட்டு வருஷங்களாக கிழவர் தம்பி மகனைத்தான் சொந்த மகனாகப் பாவித்து வந்தார். ஆனால் ஒருநாள் திடீரென்று அவர் மனம் மாறிவிட்டது. மனம் மாறியதற்குக் காரணம் தெரியவில்லை. அவர்கள் வீட்டில் வேலை செய்து வந்த வேலைக்காரன் மனைவி சாகக் கிடந்தாள். கிழவரைப் பார்க்க வேண்டும் என்று சொன்னாள். கிழவர் அதைத் தட்டாமல் போய் விட்டு வந்தார். அன்று முதல் அவர் போக்கே மாறிவிட்டது. அந்த வேலைக்காரி அவரிடம் என்ன சொன்னாளோ என்னவோ, அவள் அன்றே இறந்தும் போய்விட்டாள்.

கிழவர், வித்தியாசமாக நடந்து கொள்வதை அறிந்த சிங்காரவேலன் ஜாக்கிரதையாக இருக்கத் தலைப்பட்டான். ஒரு நாள் கிழவர் அவனுடைய அறையை அவன் இல்லாதபோது சோதனை போட்ட போது ஒரு மண்டை ஓடும், ஒரு புதுவிதமான பெட்டியும் இருப்ப

தைக் கண்டார். மண்டை ஓட்டை அப்படியே வைத்துவிட்டு, அந்தப் பெட்டியை மட்டும் எடுத்து வைத்துக் கொண்டு விட்டார் என்று தெரிந்தது. ஏனெனில் கிழவர் மறுநாளே அந்த அம்மாளிடம், ''நான் சென்னைக்குப் போகிறேன். வர நாளாகும். இருந்தாலும் நல்ல சேதியோடு வருவேன் என்று நினைக்கிறேன். ஒன்றுக்கும் பயப்படாமல் இரு. எதற்கும் இந்தச் சிங்கார வேலனை நம்பாதே!'' என்று சொல்லிவிட்டுப் போனார். அவர் போன பிறகுதான், ''என் அறையில் ஒரு பெட்டி இருந்ததே. எங்கே?'' என்று அந்தச் சிங்கார வேலன் வந்து மிரட்டினான்.

அந்த அம்மாள் என்ன கண்டாள், பாவம்! அவளை அவன் இம்சித்தான்; கொடுமைப்படுத்தினான்; தனி அறையில் சிறைப்படுத்துவது போல் சிறை செய்தான். சமையலுக்கும் காவலுக்குமாக அந்தப் பர்மாக்காரியை வைத்துவிட்டு, கிழவரைத் தேடிக் கொண்டு சென்னைக்குக் கிளம்பிவிட்டான்.

இவ்வளவு விவரங்களும் தெரிந்து கொண்ட பிறகு, ''இந்தப் படத்தில் இருப்பவன்தான் சிங்கார வேலனா?'' என்று கேட்டான் ஷங்கர்.

''ஆமாம்'' என்றாள் அந்த அம்மாள்.

''அப்போ கிங்கிங்?''

''அதுதான் அவனை வீட்டில் கூப்பிடும் பெயர்.''

இப்படி அந்த அம்மாள் சொன்னதும் பளிச்சென்று ஒன்றுக்கு ஒன்று இருந்த தொடர்பு புரியலாயிற்று. மற்ற விவரங்கள் தெரிய வந்தன.

கிங்கிங் கிழவரைச் சண்டையிட்டுக் கொல்ல முயன்றதற்கு அந்தப் பெட்டியே காரணம். அப்பெட்டியை அபகரிக்கவே அவன் அவரைத் தேடிக்கொண்டு சென்னை வந்தான். கிழவர் பலே கெட்டிக்கார். உயிரை விட்டாலும் பெட்டியை விடவில்லை.

''பெட்டி வேண்டுமென்றால் உண்மையைச் சொல். எனக்கு எல்லாம் தெரியும். நீதான் வேலைக்காரி மூலமாக அந்தக் குழந்தையை அவள் மகளிடம் கொடுத்து அனுப்பியிருக்கிறாய். உண்டா இல்லையா?'' என்றார் கிழவர்.

''ஆமாம்'' என்றான் கிங்கிங்.

''குழந்தை எங்கே?''

''எனக்கு உண்மையாகத் தெரியாது. அந்த வேலைக்காரியின் மகள் பெயர் காளி. அவள் கணவன் பெயர் பக்கிரி. அவ்வளவுதான் எனக்குத் தெரியும். பெட்டியைக் கொடுங்கள். இரண்டு பேரையும் நான் பார்த்ததுகூட இல்லை!'' என்றான் கிங்கிங்.

''சரி; ஆனால் என் மகனை, உன் அண்ணனை நீ ஜாவாவில் என்ன செய்தாய்?''

''நான் ஒன்றும் செய்யவில்லை. அவன் நோய்கண்டுதான் இறந்து போனான்.''

''இல்லை; பொய். உன்னிடம் இருக்கும் மண்டை ஓடு ஏது?''

''ஒரு வித்தைக்காரன் ஜாவாவில் கொடுத்தான்.''

''எதற்காக? உன் உத்தரவுப்படி அவனைத் தீர்த்துக் கட்டிவிட்டதாக நிரூபிக்கத்தானே!''

இந்தச் சம்பாஷணைதான் துறைமுகக் கரையில் அந்தக் கிழவருக்கும் கிங்கிங்குக்கும் நடந்தது. கிங்கிங் பதில் சொல்லவில்லை. கிழவர் பெட்டியைக் கொடுக்கவில்லை. கழுத்தை நெரித்துக் கொன்றுவிடத் துணிந்துவிட்டான் கிங்கிங். ஆனால் அவன் ஒன்று நினைக்க, விதி வேறு விதமாக எண்ணிவிட்டது.

கிழவர் அங்கே சாகாமல், சீனனே தன்னுடைய உண்மையான பேரன் என்பதை அறிந்து கொண்டு உயில் எழுதி வைத்த பிறகுதான் இறந்தார். சீனனிடம் அதைச் சொல்லுமுன் அவர் உயிர் பிரிந்து விட்டது. சீனனுடைய பெயர், அவன் சிற்றப்பனின் பெயர், சின்னம்மாவின் பெயரை விசாரித்தபோது அவர் உண்மையை உணர்ந்துகொண்டு விட்டார். அதற்குமேல்தான் அவனிடம் அந்தச் சு-சூ பெட்டியைக் கொடுத்தார்.

சு-சூ பெட்டியின் மர்மம் என்ன? கிழவருடைய சொத்து கிடைக்காவிட்டாலும் அது கிடைத்தால்



''மாமா, நீங்க இந்தப் படத்தைப் போட்டு முடிச்சதும் இது யார் படம்னு நான் சொல்லி விடுவேன்!''

''போடா, முட்டாள். போட்டு முடித்த பிறகு தானே என்னாலேயே சொல்ல முடியும்!..''

போதும் என்று கிங்கிங் முயன்றதன் காரணம் என்ன?

அது இதுதான்! அது சீன தேசத்து மந்திரவாதி கொண்டு வந்து கொடுத்த பெட்டி. அந்தப் பெட்டிதான் சீனனுடைய தந்தையிடம் இருந்த பெட்டி. புதையலை ஒளித்து வைத்த இடத்தைக் காட்டும் நீலப் படமும் அந்த இடத்தின் சாவிகளைப் பாங்கில் பாதுகாப்பில் வைத்திருப்பதற்கான சீட்டும், பாங்கி டெபாஸிட் பெட்டியின் திறவுகோலும்தான் அதனுள் இருந்தன. அந்தப் புதையலுடைய பெறுமானம் கிழவருடைய சொத்துக்களுக்குச் சமமான மதிப்புடையது. அதனால்தான் கிங்கிங் அதை 'விடேன் தொடேன்' என்று தேடிக் கொண்டு வந்தான். கிழவர் இறந்த பிறகு புதையலை எடுத்துக் கொள்ளலாம் என்றுதான் அவன் அவ்வளவு நாளும் அதைக் கொண்டு வராமல் இருந்தான்.

வந்த காரியம் முடிந்து ஊர் திரும்பும்போது அந்த மண்டை ஓடு இனி எதற்கு? சீனன் தன் அறையிலிருந்து கீழே போட்ட மண்டை ஓட்டை வாங்கிக் கொண்ட கை பக்கிரியின் கை. ஆனால் அதை அவன் கீழே நழுவவிட்டுவிட்டான். ஷங்கங் ஒளித்து வைத்தது அவனுக்குத் தெரியாது. குப்பைத் தொட்டியில் விழுந்திருக்குமோ என்று கிளறிப் பார்த்தபோது அது கையில் கிடைத்துவிட்டது. அதை எடுத்துக் கொண்டுதான் அவன் குடிசைக்கு வந்தான். கிங்கிங் கொடுத்த ஆயிரம் ரூபாய்களைப் பத்திரமாக வைக்க அவனிடம் பெட்டி எது? அதனால்தான் அவன் குடிசையினுள் குழிதோண்டிப் பாதுகாப்பாக வைக்க முயன்று கொண்டிருந்தான். அதற்குள் எல்லாமே மாறிவிட்டன.

* * *

''ஷங்கங்! நீ இல்லாவிட்டால் எனக்கு இந்தச் சொத்தும் வந்திருக்காது. என் அம்மாவையும் நான் மீண்டும் உயிரோடு பார்த்திருக்க முடியாது! உன் மூளையே மூளை!'' என்றான் சீனன், மனப் பூர்வமான நன்றியறிதலுடன்.

இருவரும் சீனனுடைய அன்னையை அழைத்துக் கொண்டு சென்னைக் கப்பலில் வந்து கொண்டிருந்தார்கள்.

''நீ இல்லாவிட்டால் நான் இவ்வளவு நேரம் 'ஒன்றீணு, இரண்டிரீணு' என்று தொண்டை கிழியச் சைனா பஜாரில் கத்திக்கொண்டுதான் நிற்பேன்!'' என்றான் ஷங்கங்.

இருவரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். சீனனுடைய அம்மாவும் அவர்களுடைய சிரிப்பில் வருத்தத்தோடு கலந்து கொண்டாள். ''பாவம், தங்கத் தொட்டிலில் தூங்க வேண்டிய நீங்கள் குப்பை மேட்டில் வளர்ந்தீர்களே!'' என்று தான் அவள் மனம் எண்ணியது.

''குப்பை மேட்டில் வளர்ந்தாலும் உங்கள் மகனுக்குக் குணம் தங்கக்கட்டி!'' என்றான் ஷங்கங்.

''நீயும் எனக்கு இன்னொரு மகன் போலத்தான்! இன்றுபோல் என்றும் நீங்கள் இரண்டு பேருமே இருக்க வேண்டும்'' என்று வாழ்த்தினாள் சீனனுடைய அன்னை. அத்தனை சொத்துக்கும் கடைசிவரையில் அவர்கள் இருவருமே எஜமானராக இருந்தார்கள். **சுபம்.**

பாரய்யா பாரய்யா பார்!

ஜோரய்யா ஜோரய்யா ஜோர்!
ஜோருக்கு மேல் ஒரு
ஜோர் வந்து நின்றது
ஜோரய்யா ஜோரய்யா ஜோர்! 1
காரய்யா காரய்யா கார்!
கார் வந்து காளை மேல்
மோதி உடைந்தது
காரய்யா காரய்யா கார்! 2
சாரய்யா சாரய்யா சார்?
சார் சொன்ன வார்த்தைகள்
சரித்திரம் ஆயிற்று
சாரய்யா சாரய்யா சார்! 3
மோரய்யா மோரய்யா மோர்!
மோரென்று நீருக்கு
வேறொரு பேருண்டு
மோரய்யா மோரய்யா மோர்! 4
சீரய்யா சீரய்யா சீர்
சீரென்று செல்வத்தை
யாரும் புகழ்ந்திடல்
சீரய்யா சீரய்யா சீர்! 5
பேரய்யா பேரய்யா பேர்!
பேருக்கு அலைந்தவர்
வேரைப் பறித்தனர்
பேரய்யா பேரய்யா பேர்! 6
போரய்யா போரய்யா போர்!
பொந்தில் நுழைந்தவர்
மேல் குண்டு போடுதல்
போரய்யா போரய்யா போர்! 7
பாரய்யா பாரய்யா பார்!
பார்த்துப் பிழைத்தவர்
பாரில் உயர்ந்தவர்
பாரய்யா பாரய்யா பார்! 8

—K. பொன்னுசாமி, புனே-2.

நீங்களும் நானும்

[இந்தப் பகுதியில் உங்களுக்குத் தோன்றும் சந்தேகங்களையெல்லாம் கேட்கலாம். எனக்குத் தோன்றியவைகளைச் சொல்கிறேன். வேடிக்கை விளையாட்டுக் கேள்விகளாக இருக்கலாம்; ஆனால் பிறரைப் புண்படுத்தாத முறையிலும், கூடுமானவரையில் உங்களுக்குப் பயன்படக்கூடிய கேள்விகளாகவும் கேளுங்கள். —ஆர்வி.]

பி. முத்துசாமி, சென்னிமலை.

கே: நான் ஒரு பெரிய ஆராய்ச்சியாளனாக வர வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.

ப: ஆசைப்படலாம்; அதற்கு முன்பாக, பெரிய ஆராய்ச்சியாளர்களெல்லாம் தம் சிறுவயதில் எப்படி இருந்தார்கள், இருக்க ஆசைப்பட்டார்கள் என்று ஆராய்ந்து பாரேன். உபயோகமாக இருக்கும்.

வி. எஸ். ராஜு, ராயபுரம்.

கே: உலகிலேயே மக்களால் அதிகமாகப் பேசப்படும் மொழி எது?

ப: ஆங்கிலம்.

கு. சா. கணபதி, ஆண்டிப்பட்டி.

கே: வௌவால் பிராணிகள் இனத்தைச் சேர்ந்ததா, பறவை இனத்தைச் சேர்ந்ததா? எவ்விதத்தில்?

ப: அது பாதி பறவை இனம்; பாதி பிராணி இனம்; பறக்கும். ஆனால் பறவைகளைப் போல் முட்டையிடாது. குஞ்சு பொரிக்கும்; ஆனால் பிராணி வகையில் சேராது. இரண்டிலும் சேராத இனம் அது. கிளையிலேயோ, மண்டபங்களிலேயோ கூட அது நிமிர்ந்து உட்காராது; தலை கீழாகத்தான் தொங்கும்.

ப. மாணிக்கம், மன்னார்குடி.

கே: பல்லைக் குச்சி போட்டு விளக்குவது நல்லதா? பிரஷ்ஷைக் கொண்டு தேய்ப்பது நல்லதா?

ப: ஆலங்குச்சி, கருவேலங்குச்சி இவை நல்லவைதான், ஆனால் நல்ல பற்பசை போட்டு, பிரஷ்ஷைக் கொண்டு துலக்குவதும் சிறந்ததே.

தி. ப. நடராஜசுந்தரம், ஆரூர்

கே: என் உடலில் தேமல் படருகிறது. இதைப் போக்க வழி உண்டா?

ப: தேமல் ஒரு வகைச் சரும வியாதி; அதைப் போக்க முடியும். வைத்தியரைக் கேட்டால் சொல்வார்.

ஆர். சுந்தரராமன், பம்பாய்-19

கே: உலகத்திலேயே மிகப் பெரிய நூல்நிலையம் எது?

ப: பாரிஸ் நகரிலுள்ள 'பிப்லியோதெகு நேஷனேல்' என்பதுதான்.

ஆர். ஜயலக்ஷ்மி, தஞ்சாவூர்

கே: மிகவும் வேகமாக ஓடக்கூடிய மிருகம் எது?

ப: சிறுத்தைப் புலி; அது மணிக்கு 70 மைல் வரையில் ஓடுமாம். ஆனால் அதிக தூரம் அதனால் ஓடமுடியாது. பிராங் பக் என்ற மான் மணிக்கு அறுபது மைல் ஓடுமாம்; அதனாலும் அதாவது இரண்டு மைல்களுக்குமேல் அதே வேகத்தில் ஓடமுடியாது. குழி முயல், குள்ளநரி, மங்கோலியக் காட்டுக் கழுதை இவையெல்லாம் மணிக்கு நாற்பது முதல் நாற்பத்தைந்து மைல் வரையில் ஓடக்கூடியவையாம். சிறந்த ஜாதிக் குதிரைகள்தான் அதிக தூரம் ஓடக்கூடியவை. மணிக்கு நாற்பத்திரண்டரை மைல் ஓடுகிற ரிக்கார்டு இருக்கிறது.

ஏ. கிருஷ்ணமூர்த்தி, கும்பகோணம்

கே: உலகத்தில் இப்போதுள்ள சிறந்த ராஜதந்திரி யார்?

ப: ஜவாஹர்லால் நேருதான்.

என். அரங்கராஜி, பழனி

கே: கக கண் கண கன் கஆ கசி கரி கய கரே! கபு கரி ககி கற கதா? பதில் சொல்லும்!

ப: கஇ கதெ கன் கன கஅ கச கட் கடு கக் ககே கள் கவி!

கே. பி. காதர்உசேன், தென்னூர்

கே: எனக்கு ஏரோப்பிளேன் விட ஆசையாக இருக்கிறது. அதற்கு என்ன செய்யவேண்டும்?

ப: அதொன்றும் பெரிய காரியமில்லை. இரண்டரையணுவில் அதாவது பதினறு நயா பைசாவில் உன்னுடைய ஆசையைப் பூர்த்தி செய்துகொண்டு விடலாம். பிளாஸ்டிக் ஏரோப்பிளேன் விலையைத் தான் சொல்கிறேன். அதில் ஒன்றை வாங்கி விட்டுப்பாரேன்!

மு. முஸ்தபா கமாலுதீன், அரவக்குறிச்சி

கே: இந்தத் தேர்தலில் லோக்சபாவுக்கு (பாராளுமன்றத்திற்கு)த் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் தொகை என்ன?

ப: தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் தொகை 494 தான். ஆனல் இன்னும் ஆறு பிரதிநிதிகள் லோக்சபாவில் இருப்பார்கள். இந்த ஆறு பேர்களும் ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வருபவர்கள். இவர்களைச் சேர்த்து லோக்சபா உறுப்பினர்கள் எண்ணிக்கை 500.

எஸ். ராமலிங்கம், திண்டிவனம்

கே; பறக்கும் தட்டு என்றல் என்ன? எந்தக் கிரகத்தைச் சேர்ந்தது அது?

ப: ஆகாயத்தில் எங்கிருந்தோ வந்து எப்போதாவது தோன்றும். இதன் முழு உண்மையும் இது வரை ஆராய்ச்சிக்கு அகப்படவில்லை. ஆனல் வான ஆராய்ச்சி பௌதிக சாஸ்திரி ஒருவர் இதை வெறும் உருவெளி என்று கூறு

கண்டுபிடியுங்கள்: விடை







வேடிக்கைக் கணக்குகள்

விடைகள்

1. சாத்தியமே! இரண்டில் ஒன்று நாலணா நாணயமில்லை. ஆனால் மற்றொன்று நாலணா நாணயம்.
2. கோயிலுக்குப் புறப்படும் போது எடுத்துச் சென்ற ரூ. 2-10-0.
3. தூக்கத்திலிருந்து கண் விழித்தபோது இரவு பன்னிரண்டரை மணி.

கிறார். வெப்பமான காற்றின் இடப்பெயர்ச்சிதான் இந்த உரு வெளிக்குக் காரணம் என்று அவர் கருதுகிறார்.

ஐ. மொயினுத்தீன், மதுக்கரை

கே: 'ரீடர்ஸ் டைஜஸ்ட்' என்ற பத்திரிகை அமெரிக்காவில் எங்கே எப்போதுமுதல் பிரசுரமாகிறது? எத்தனை பாஷைகளில்? எத்தனை பிரதிகள்?

ப: பிளஸன்ட் வில் என்ற நகரில் அச்சாகிறதாகத்தான் அதன் விலாசம். ஆனால் அந்த நகருக்குச் சில மைல் வடக்கே சப்பாக்குவா என்ற இடத்தில் அது பிரசுரமாகிறது. 11 மொழிகளில் மொத்தம் 1 கோடியே 55 லட்சம் பிரதிகள் அச்சாகின்றன. குருடர்கள் படிக்கும் பிரெயில் எழுத்திலும் அது தயாராகிறது. 31,000 குருடர்கள் படிக்கிறார்கள். 1920-இல் அதன் முதல் பிரசுரம் வெளியாகத் தொடங்கியது.

டி. ஆர். சுந்தரம், சேலம்

கே: விமரிசனம் என்றால் என்ன?

ப: சுருக்கமாகச் சொன்னால் கட்டின வீட்டுக்குப் பழுது சொல்லிக் கொண்டிருப்பதுதான்.

தி. மாலதி, மதுரை

கே: அஸ்திவாரக் கல் நாட்ட மந்திரிகளையே அழைக்கிறார்களே, ஏன்?

ப: அவர்களுக்கு அதற்குமேல் கட்டத் தெரியாது என்று நினைப்பதனால்தான் என்று நினைக்கிறேன்.

சௌந்தரபாண்டியன்,
விருதுநகர்

கே: ஆடம்பரம் மிகுந்த நாடு அமெரிக்கா என்கிறேன் நான். நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?

ப: இல்லை என்கிறேன் நான். வீட்டையும் நிலத்தையும் அடமானம் செய்து கடன் வாங்கி, கல்யாணத்தை அவர்கள் ஆடம்பரமாகச் செய்வதில்லை. பணக்காரர் கூட அங்கே வீட்டு வேலைக்கு ஆள் வைத்துக்கொள்வதில்லை. விளக்குக் கூட ஏற்றாத கோயில்களுக்குத் தர்மகர்த்தாக்கள் இருப்பதில்லை! ஓய்வு பெறச் சினிமாவுக்குப் போகிறவர்கள் இருப்பார்களே தவிர, உழைக்காமலே உழைக்க வேண்டிய நேரத்தைச் சினிமாப் பார்த்துக் கழிப்பவர்கள் அங்கே இல்லை. வறுமைக் கும்பலுக்கு நடுவே சேற்றை வாரியடிக்கும் வாகனச் சவாரி அங்கே இல்லை, தெருவிலே பிச்சைக்காரர்களும், சட்டசபைகளிலே பொம்மைகளும் அங்கே இல்லை. ஆடம்பரம் மிகுந்த நாடு என்று சொல்வது சரியல்ல; செல்வம் கொழிக்கும் நாடு என்று சொல்வதே சரி. கடலில் கொட்டினாலும் கொட்டுவோம்; கஷ்டப்படும் நாடுகளுக்கு உதவமாட்டோம் என்று விளைபொருள்களை வீணாக்கும்! அளவுக்குச் செல்வமும் செருக்கும் மிகுந்த நாடு அது.

ரா. விநாயகம், வேலூர் (வ. ஆ)

கே: அமெரிக்கா செல்வம் மிகுந்த நாடு; இங்கிலாந்து பொறுப்பு உணர்ச்சி தெரிந்த நாடு; ரஷ்யா உழைப்பு நிறைந்த நாடு; இந்தியா - ?

ப: பண்பு நிறைந்த நாடு.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

சென்னை-600 008

நாணய மாற்று அட்டவணை

★

அணா.	பை.	நயா பைசா.	அணா.	பை.	நயா பைசா.	அணா.	பை.	நயா பைசா.
0	3	2	5	6	34	10	9	67
0	6	3	5	9	36	11	அணா	69
0	9	5	6	அணா	37	11	3	70
1	அணா	6	6	3	39	11	6	72
1	3	8	6	6	41	11	9	73
1	6	9	6	9	42	12	அணா	75
1	9	11	7	அணா	44	12	3	77
2	அணா	12	7	3	45	12	6	78
2	3	14	7	6	47	12	9	80
2	6	16	7	9	48	13	அணா	81
2	9	17	8	அணா	50	13	3	83
3	அணா	19	8	3	52	13	6	84
3	3	20	8	6	53	13	9	86
3	6	22	8	9	55	14	அணா	87
3	9	23	9	அணா	56	14	3	89
4	அணா	25	9	3	58	14	6	91
4	3	27	9	6	59	14	9	92
4	6	28	9	9	61	15	அணா	94
4	9	30	10	அணா	62	15	3	95
5	அணா	31	10	3	64	15	6	97
5	3	33	10	6	66	15	9	98
						16	அணா	100

நீங்கள் பணம் கொடுக்கும்போது அல்லது சில்லரை கொடுக்கும்போது புதிய நாணயங்களாகவோ பழைய நாணயங்களாகவோ அல்லது இரண்டும் சேர்த்தோ கொடுக்கலாம்.

(Regd. as Newspaper in Ceylon.) Reg. No. M. 5542

துப்பறியும் மோகன்

பரிசுத்தொடர்கதை

15-4-'57

கண்ணனில் ஆரம்பமாகிறது

எழுதியவர்

தே. பார்த்தசாரதி